# ஆத்மஜோதி



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

பங்குனி — 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 35 — பங்குனி — (15-3-83) — சுடர்: - 5


## பொருளடக்கம்


| | |
|---|---|
| கோடிக்கு ஒருவர்-போற்றிப் பணிந்திடுவாம் | —193 |
| வாரியார் வாக்கு | —194 |
| வாரியார் சுவாமிகள் | —195 |
| திருப்புகழ் தியாகமணி | —201 |
| ''வாரி'' யார்? | —207 |
| புனிதவதியார் வழிவந்த புதுமைப்பெண் | —209 |
| சுவாமி ராமதாஸ் அருளுரை | —214 |
| நடமாடும் பல்கலைக் கழகம் | —215 |
| புஜங்காசனம் | —218 |
| தெய்வ மனிதர் | —219 |
| க. பொ. த. (உயர்தரம்)—இந்து நாகரிகம்-2 | —231 |
| மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா? | —235 |
| ஆத்மசிந்தனை | —238 |


## நூல் வெளியீட்டு விழா

'ஆத்மஜோதி' ஆசிரியர்
திரு. நா. முத்தையா அவர்களால்
எழுதப்பெற்ற

# நிழலின் பின்னே மனிதன்

என்ற நூல்

**திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால்**
வெளியீடு செய்துவைக்கப்படும்.

இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றேம்.

பிரதி ஒன்றின் விலை ரூபா 10-00

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி

**14-3-83 திங்கள் மாலை 6 மணிக்கு நாவலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடிக்கு ஒருவர்

— இடைக்குடி எப். பாலசுப்பிரமணியம் —

கந்தன் சேவையில் கடவுள் திருப்பணியில்
சந்தத் திருப்புகழைச் சாற்றுவதில்—செந்தமிழ்ச் சொல்
மாரி பொழிவதில் வள்ளல்கிரு பானந்த
வாரிக்கீ டுண்டோ வழுத்து.

ஈசன் பெயர்சொல்லி ஏய்ப்போர்கள் வாழ்கலியில்
மாசில்கிரு பானந்த வாரியார்—ஆசியருள்
அப்பர்சம் பந்தர் அருணகிரி யாரொத்த
ஒப்பிலவ தாரமே தான்.

அற்புதமாய்ப் பேசுகிரு பானந்த வாரியார்
சொற்பொழிவின் சூட்சுமத்தைச் சிந்தித்தால்—செப்புதற்குக்
காரியம் ஒன்றுமிலை கந்தன் குரல்கொடுக்க
வாரியார் வாயசைக்கின் றார்.

நாவலனைப் பாவலனை நம்சைவ வைணவத்தின்
காவலனைக் கானக் கலைவலனைச்—சேவலனைப்
பாடிப் பரவுகிரு பானந்த வாரிதனைக்
கோடிக் கொருவரெனக் கூறு.

---

# போற்றிப் பணிந்திடுவாம்

— துரை. கோ. தண்டபாணி —

சிவம் பெருக்கும் திருநெறியே சிவன் சிவம் ஆம்நெறியென்
றுவந்தினிது நாள்தோறும் ஊரூராய் உரைசெய்து
அவமகற்றும் எமதாசான் அருள்கிருபா னந்தரினை
பவமகற்றும் கமலமலர்ப் பதம்போற்றிப் பணிந்திடுவாம்.

முன்னையென திருவினையின் முதல்களைந்து முருகனருள்
தன்னையெனக் களித்தாண்ட தன்னிகரில் அருட்குருவே
அன்னையினும் அன்புடையாய்! அருளுடையாய்! அருளின்பம்
துன்னியசீர்க் கடலேநின் தூயதிருவடி போற்றி!

# வாரியார் வாக்கு

உடம்பை வளர்க்கிறவர் டாக்டர். அறிவை வளர்க்கிறவர் குருநாதர். டாக்டரிடம் போனால் டானிக் தருவார். குருநாதரிடம் போனால் அறிவைக் கொடுப்பார். ஞானத்தைக் கொடுப்பவர் ஆசாரியர் ஒருவரைத் தவிர வேறு யாருமில்லை. இதை மனதிலே நன்றாகப் பதியவைக்க வேண்டும். ஆச்சாரியார் தன் பார்வையினாலேயே ஞானத்தைக் கொடுப்பார். வாக்கினாலேயே வாழவைப்பார். "நீ சௌக்கியமாக இரு" என்றால் போதும், வேறு ஒன்றும் தேவையில்லை.

* * *

மரக்கோணலை பஞ்சுநூல் மாற்றும். மனக் கோணலை அறிவு நூல் மாற்றும். "கொடிய மனத்தார்" என்றார் பட்டினத்தடிகள். "துன்னருங் கொடுமனக்கூனி" என்கின்றார் கம்பநாடார். கூனிக்கு உடம்பு மட்டும் கூனல் அன்று. உள்ளத்திலும் கோணல். எனவே இந்த உள்ளத்தின் கோணலை மாற்றுவன நீதி நூல்கள் ஆகும்.

* * *

கப்பலைச் சுற்றிக் கடல். கப்பலுக்குள் கடல் இருக்கக் கூடாது. கடலிலே கப்பல் இருக்க வேண்டும். கப்பலுக்குள் மாலுமி-ஓட்டுகிறவன் இருக்க வேண்டும். கடலில் கப்பல்; கப்பலுக்குள் கடல் என்றால்? அதுபோல, கார்மேல் நாம் ஏறவேண்டும். நம் மேல் கார் ஏறினால், நம் வாழ்வு முடிந்துவிடும். உலகத்திலே நாம் இருக்க வேண்டும். நம்மிடம் உலகம் இருக்கக்கூடாது. நாம் பிரசங்கம் கேட்டால் அனுசரிக்க வேண்டும். நம் நெஞ்சினுள் சிவன் இருக்க வேண்டும்.

* * *

குருபக்தி, சிவபக்தி, அடியார் பக்தி செய்ய வேண்டும். சூரியகாந்தக் கண்ணாடிக்குக் கீழே வேட்டி வைப்பது போல் குருபக்தி. இராமகிருஷ்ணர் அப்படித்தான் கை வைத்தார். நரேந்திரருக்கு ஞானம் வந்துவிட்டது. இருபது ஆண்டுகளாகத் தேடிய பணம் வைத்திருக்கிற பெட்டியை மகனிடத்திலே கொடுக்கிற மாதிரி, ஆச்சாரியன் நமக்கு ஞானத்தை ஒரு விநாடியிலேயே தருகின்றார். ஆகவே பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இறைவனே ஞான குருவாக வருகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரியார் சுவாமிகள்

—ஆசிரியர்—

நாரத மகாமுனிவராகிய தெய்வ மகாரிஷிக்கு வாழ் நாள் முழுவதும் ஒரே ஒரு தொழில்தான் இருந்தது. அதாவது இடைவிடாது இறைநாமம் செப்புதல். இதைத்தவிர வேறு எத்தொழிலையும் உயர்வுடையதாக நாரதர் கருதவில்லை: இதே போல வாரியார் சுவாமிகளும் பொதுமக்களை நல்லவர் களாக்குதற்காக நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பிரசங்கத்தையே தமது தொழிலாகக் கொண்டுள்ளார்.

சமயப்பணி செய்பவர்கள் ஓய்வு நேர வேலையாகத்தான் செய்வார்களே தவிர, வாரியார் சுவாமிகளைப் போல முழுநேர மும் இதற்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்களைக் காணுதல் மிக அரிதிலும் அரிதாம். வாரியார் சுவாமிகள் இவ் வளவு பணம் வாங்குகிறார்களே, இதனைப் பணி என்று சொல் லலாமா? என்று சந்தேகிப்பவருமுண்டு. உண்மையை உணர்ந் தால் யாரும் அப்படிக் கருதமாட்டார்கள். அவர் பிரசங்கத் திற்கு வாங்குகின்ற பணம் எல்லாம் தெய்வத் திருப்பணிக்கும் அநாதைப்பிள்ளைகளின் கல்வி, உணவு, உடை என்பவற்றுக் குமே செலவிடப்படுகின்றது.

முதலில் எவ்வித சன்மானமும் பெறுமலேதான் தெய்வத் தொண்டாகப் பிரசங்கத்தைச் செய்து வந்தார்கள். ஆனால் பொதுமக்கள் அதனைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள். அவருடைய தெய்வீக சேவைக்கு மதிப்புக் கொடுக்கத் தவறி விட்டார்கள். அவரை அழைப்பவர்கள் அவரது உடல் நலத் தைக் கருதுவதில்லை; போக்குவரவுபற்றிக் கவலைப்படுவ தில்லை. இந்நிலையில்தான் அவர்கள் தமது பேச்சுக்குப் பணம் பெறவேண்டி வந்தது. அதுவுமல்லாமல் பணம் பெறுமல் எதனைச் செய்தாலும் அதனை மிகக் குறைந்த எடைபோடுவது வழக்கமாகிவிட்டது ஒரு சிலர் இனமாகக் கொடுத்தால் அதனை பாதுகாப்பது ஒருவிதம்; தாமே பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்வார்களானுல் அதனைப் பேணுவது வேறு விதம். காய்கறிகள் மலிந்திருக்கும் காலங்களில் அதிகமாக வீட்டிற்கு வாங்கிக்கொண்டு வந்தால் அதனைப் பக்குவப் படுத்துவது ஒருவிதம்; மிக விலையான காலத்தில் வாங்கிக் கொண்டு வந்தால் அதனைப் பக்குவப்படுத்துவது வேறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ரூபாவுக்குப் பத்து கத்தரிக்காய்கள் வாங்கிச் சமைப்பதற்கும், ரூபாய்க்கு ஒரு கத்தரிக்காய் வாங்கிச் சமைப்பதற்கும் வீட்டிலேயே வித்தியாசத்தைக் காணமுடிகிறது.

சுவாமிகள் பணம் பெற்றுக்கொண்டாலும் அப்பணம் அவ்வளவும் தருமகைங்கரியத்திற்கே செலவாகிறது என்பதை மக்கள் உணரத்தலைப்பட்டார்கள். சுவாமிகளைப் பக்தி சிரத்தையாக அழைத்து விஷயங்களைக் கருத்தாகவும் கேட்டுத் தெளிந்தார்கள். இத் தருணத்தில் மிளகாய்ச் சாமியார் ஒருவருடைய கதை நினைவுக்கு வருகின்றது:-

வள்ளியூரில் அரைத்த மிளகாயை மாத்திரம் சாப்பிட்டு சிறிது மோரும் குடித்துவந்த ஒரு சாமியார் வாழ்ந்து வந்தார். மிளகாய் மாத்திரம் சாப்பிட்டுவந்தபடியினால் மக்கள் அவரை மிளகாய்ச் சாமியார் என்று அழைத்தனர். வாரியார் சுவாமிகளுக்கு வயது 28 ஆக இருக்கும்போது மிளகாய்ச் சாமியார் அவரை பிரசங்கத்திற்கு அழைத்தார். வாரியார் சுவாமிகளுடைய பேச்சு 4 மணிநேரம் நடந்தது. இதனைக் கேட்டு மகிழ்ந்த மிளகாய்ச் சாமியார் வாரியார் சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு, "வாரியார் எப்பொழுதும் ஏழையாகவே இருக்கவேண்டும் என்று முருகப் பெருமானை நான் பிரார்த்திக்கின்றேன்" என்று ஆசியும் கூறினார். வாரியார் சுவாமிகள் இந்த ஆசியைக் கேட்டுத் திகைத்தார். திகைப்பைக் கண்டு கொண்ட மிளகாய்ச் சாமியார் விளக்கமுங் கூறினார்.

"என்ன யோசிக்கிறீர்? நீர் கோடீஸ்வரனாக இருந்தால் நாங்கள் அழைக்கின்றபோதெல்லாம் வருவீர்களா? நீர் ஏழையாக இருந்தால்தான் ஊர் ஊராகச் சென்று விரிவுரை செய்து முருகன் பெருமையை பரவுமாறு செய்வீர்கள். அந்தக் காலத்தில் புலவர்கள் வறுமையால் வாழ்ந்ததால்தானே தமிழை வளர்த்தார்கள்? அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்" என்றார்.

வாரியார் சுவாமிகளை ஆண்டுதோறும் அன்பர்கள் அழைத்து இலட்சக் கணக்கான ரூபாய்களை அவருடைய சேவைக்காகக் கொடுக்கிறார்கள். அத்தனையையும் வாங்கிய வண்ணமே தெய்வப்பணிக்காக என்று மறுகைக்குத் தெரியாமல் கொடுத்து விடுகிறார். கையில் தங்கி இருந்தால்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்காரன். பணம் இல்லாதபோது ஏழைதானே. மிளகாய்ச் சாமியாருடைய ஆசியும் பலித்துவிட்டது.

சுவாமிகள் இயமநியமங்கள் உடையவர். சுவாமிகள் தாம் ஆத்மார்த்தமாகப் பூஜை செய்யும் முருகனுக்குப் பூஜை செய்யாமல் உணவு உண்பதில்லை என்ற கோட்பாடு உடையவர்கள். அந்தக் கோட்பாட்டிலிருந்து அவர் எப்பொழுதுமே தவறியதில்லை.

முதன் முதல் இலங்கைக்குச் சுவாமிகளை அறிமுகப்படுத்திய பெருமை வல்வெட்டித்துறை சிவன் கோயில் எஜமானராயிருந்த திரு. வெங்கடாசலம்பிள்ளை அவர்களைச் சார்ந்ததாகும். சிவன் கோயில் விழாப்பேச்சுக்கள் முடிந்ததும் இலங்கையிலுள்ள தமிழர் வாழுமிடமெல்லாம் அழைத்தபோதெல்லாம் வாரியார் சுவாமிகள் ஞான உபதேசங்களை வாரிவாரி வழங்கினார்கள்.

சுவாமிகளுடைய பேச்சைக் கேட்டு ஆயிரக்கணக்கானோர் புலால் உண்பதை நீக்கினார்கள். இன்னும் சில தாய்மார் கணவனோடு எதிர் பேசுவதை நிறுத்தினார்கள். பல பிள்ளைகள் தாய் தந்தையரைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினார்கள். குடிக்கு அடிமைப்பட்ட குடும்பங்களில் பலர் அப்பாழுங் குழியில் விழுவதிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள்.

ஒருவன் 12 வருடங்கள் தொடர்ந்து இடைவிடாது ஒரு மூர்த்தியை உபாசனை செய்வானேயானால் அவன் காலகதியில் அம் மூர்த்தியின் உருவத்தையே பெற்றுவிடுவான் என்று பெரியோர் கூறுகின்றனர். ஒரு அன்பான கணவன் தனது அன்பான மனைவி மீதும், அன்பான மனைவி, அன்பான கணவன் மீதும் அன்பு செலுத்துவார்களேஆனால் கணவன் மனைவியின் முகச்சாயலையும், மனைவி கணவனுடைய முகச்சாயலையும் பெற்றிருப்பதை அறியலாம். இதேபோன்று வாரியார் சுவாமிகள் தமது வாழ்நாள் முழுவதும் முருகப்பெருமானை உபாசித்து உபாசித்து அவர் மயமே ஆகிவிட்டார். சுவாமிகளுடைய திருமுகத்தில் வேலிஜெளி வீசுவதை யாருங்காணலாம்.

சுவாமிகள் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்று பலர் பாராட்டியுள்ளார்கள். பல இலட்சக்கணக்கான பாடல்களை மனப்பாடம் செய்துள்ளார்கள். அதனால் இவரது மனோவலிமையையும் ஞாபக சக்தித் திறனையும் அறிய முடிந்தது. திருமுறைப்பாடல்களையும் திருப்புகழையும் அவர்கள் பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து கடைசியிலிருந்து ஒரு பாடலை அன்வயம் செய்து பாடுந்திறனைப்பார்க்கும் போது அவரது மனேசக்தியை எவரும் பாராட்டாமலிருக்க முடியாது. சுவாமிகளுடைய பேச்சில் நகைச்சுவை தாராளமாகக் கலந்திருக்கும். நகைச்சுவையினுள்ளே நல்ல நல்ல ஞானோபதேசங்கள் கலந்திருப்பது கசப்பான மருந்தை ஒரு தாய் வெல்லத்திற்குள்ளே வைத்துக் குழந்தைக்கு ஊட்டுவது போன்றதாகும். சுவாமிகள் சிரிக்கும் போது அவருடைய தோளும் குலுங்கி விழுவது ஒரு அற்புதமான காட்சியாகும்.

சில சமயங்களில் சுவாமிகள் ஓரிரவில் 3, 4 பிரசங்கங்களும் செய்திருக்கிருர்கள். சுவாமிகள் எங்கெங்கு பிரசங்கம் செய்யச் சென்ருலும் அங்கங்கெல்லாம் ஒரு கூட்டம் திரண்டு சென்று கொண்டே இருக்கும். சுவாமிகள் நீண்ட காலமாக 'திருப்புகழமிர்தம்' என்னும் மாதவெளியீட்டை ஆசிரியராக இருந்து நடத்திஞர்கள். அதில் தவருது ஒரு திருப்புகழிற்கு விரிவுரையும், ஒரு பெண்ணின் வாழ்க்கைச் சரித்திரமும் வெளிவந்து கொண்டிருக்கும். அது தற்போது நிறுத்தப் பட்டதாயினும் அதில் வந்த விடயங்கள் யாவும் புத்தக உருவில் வந்து விட்டன.

சுவாமிகளுக்குத்தாய் தந்தையரிடமிருந்த அன்பும் மதிப்பும் மிக அபாரமானது. தெய்வம் எனவே இருவரையும் மதித்தார்; போற்றினர். சுவாமிகளுடைய தாயார் பெயர் கனகவல்லி அம்மையார். இவர் ஏழைகளுக்கு இரங்கும் கருணைக்கடல். சுவாமி தமது பிறப்பிடமாகிய காங்கேய நல்லூருக்குச் சென்ற உடனே முதலாவதாகத் தாயாரைத் தரிசித்து அவருடைய ஆசியைப் பெற்றுக் கொள்ளுவார். அம்மையாரும் சுவாமிகளுடைய நெற்றியில் திருநீறு இட்டு நோய் நொடியின்றி நூருண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துவார்கள்.

ஒருமுறை பாரதிதாசனுடைய தலைமையில் வேலூரில் ஒரு கூட்டம் நிகழ்ந்தது. ஒரு அன்பர் சுவாமிகளும் அக் கூட்டத்திலே பேச வேண்டும் என்று அன்பினல் வற்புறுத்தி அழைத்துச் சென்றிருந்தார். சுவாமிகள் திருநீறு பூசிக் கொண்டும், உருத்திராக்க மாலை அணிந்து கொண்டும் சென்றிருந்தார். பாரதிதாசன் சுவாமிகளின் வேடப்பொலிவைப் பார்த்து இவர் புராணப் பிரசங்கியாயிற்றே என்ன பேசப் போகிருர் என்று அலட்சியமாக அறிமுகம் செய்து அரைமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துள் முடித்துவிட வேண்டும் என்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

சுவாமிகள் "செந்தமிழ்' என்ற விஷயத்தைத் தமது பேச்சின் தலையங்கமாக எடுத்துக் கொண்டு செம்மை + தமிழ் எனப் பிரித்து 'செம்மை' என்ற சொல்லைப் பற்றியே 28 நிமிடங்கள் பேசி தலைவர் குறிப்பிட்ட நேரம் முடிவுற்றபடியினால் இத்துடன் நிறுத்துகிறேன் என்று சுவாமிகள் சொன்ன உடனே, பாரதிதாசன் எழுந்து சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்டதோடு இன்னும் அரைமணி நேரம் தமிழைப் பற்றிப் பேசுமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார்.

கடவுள் இல்லை என்று சொல்லிக்கொள்வதில் ஒரு சிலர் இன்பங்கண்டனர்; கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானால் கடவுள் யாருக்குப் பயந்து ஒளித்து ஓடவேண்டும்? வெளிப்படையாக எல்லாருங்காண வெளிவந்து உலாவலாமே என்பது போன்ற கேட்போர் கலகலக்கப்பேசினர் ஒருசிலர். "கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்று வள்ளுவர் வாக்கிற்கு அமைய பகைவரும் தம் பிழையை உணர்ந்து திருந்துமாறு கடவுள் உண்டு என்பதை தகுந்த ஆதாரங்காட்டி பிரசங்க மாரி பொழிந்தவர்கள் சுவாமிகள்.

சுவாமிகள், பூண்டிமகான், மும்முடிவரம் பாலயோகி போன்றோரிடமும் சுவாமி சிவானந்த சரசுவதி போன்றோரிடமும் தொடர்புகொண்டு இவர்களுடைய அருளாசியை நிறையப் பெற்றவர்கள். இவரது பவளவிழா சிதம்பரம், நெல்லிக்குப்பம், வேலூர், குமாரசாமிப்பேட்டை போன்ற இடங்களில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன.

சுவாமிகள் ஐம்பதுக்கும் அதிகமான நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். தந்தையாருடைய கட்டளைப் பிரகாரம் சுவாமிகளால் பாடப்பட்ட காங்கேய நல்லூர்த்தல புராணம் இன்னும் அச்சேறாமலே இருக்கிறது. இந்தியாவிலுள்ள எல்லா ஆதீனங்களுடனும் சுவாமிக்கு நிறைந்த தொடர்புகளுண்டு.

சுவாமிகளுடைய தமையனாராகிய மஞ்சுநாதனசிவம் சிறந்த பண்பாடுடையவர். சோதிடக் கலையில் வல்லவர். 1954ல் சந்நியாசம் பெற்றுக்கொண்டார். காங்கேய நல்லூரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குத் தனியாக ஒரு ஆச்சிரமத்தை வாரியார் சுவாமிகள் அமைத்துக் கொடுத்தார். இவருக்குத் தீக்ஷா நாமம் 'மறை ஞானசிவம்' என்பதாகும்.

மறைஞானசிவம் வள்ளிமலையில் இராஜகோபுரத் திருப்பணியை அருகிலிருந்து செய்துமுடித்தார். காங்கேயநல்லூரில் முருகப் பெருமானுக்கு வைரமகுடம், மணிமுடி, இரத்தினகைரம், மார்பு பதக்கங்கள் முதலிய திருவாபரணங்கள் ஆச்சிரமத்திலேயே ஆசாரியை வைத்துக்கொண்டு தான் அருகில் இருந்து கண்ணுங்கருத்துமாக சுமார் 2 இலட்ச ரூபாய் செலவில் செய்துவைத்தார். வயலூர்த் திருப்பணியை வயலூரிலேயே இருந்து செம்மையான முறையில் செய்துமுடித்தார். வள்ளிமலையில் சரவணப்பொய்கைத் திருப்பணியில் ஈடுபட்டு அருகிலிருந்து செய்துமுடித்தார். இத்தகைய திருத்தொண்டர் 9-2-73ல் மகாசமாதி அடைந்தார். இவருடைய சமாதி இவர்களுடைய தந்தையாரின் சமாதிக்கருகிலேயே வைக்கப்பட்டு, அதில் விநாயகர் பிரதிஷ்டைசெய்து அதில் நித்தியவழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

வாரியார் சுவாமிகள் சிங்கப்பூர், மலேசியா, லண்டன், பிரான்ஸ் போன்ற இடங்களுக்கும் சென்று சமயப்பணி ஆற்றி உள்ளார்கள். இலங்கையில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டின் போதும் சமுகம்கொடுத்து உலகளாவிய இந்து சமயச் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்கள்.

ஆண்டு தோறும் திருவண்ணமலையில் ஆவணி மாதம் 15-ம் திகதி நடைபெற்றுவரும் அருணகிரி நாதர் விழாவில் 1967-ஆம் ஆண்டு அடியேனையும் 15 நிமிடநேரம் பேச வைத்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். சுவாமிகளுக்கு ஆத்மஜோதி நிலையத்தின் மீது நீண்டகாலமாகத் தெய்வீகத் தொடர்புண்டு. அத் தொடர்பு நீண்டகாலத்திற்கு நிலைத்து நின்று அடியேனைப் போன்றவர்களையும் புனிதராக்குமாறு எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுதல் செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ் தியாகமணி

— அன்பன் மூ. பெருமாள் —

திருமுருகப் பெருமானுடைய திருவருள் மகிமையை இத் தொல்லுலகில் வேறு ஒரு புகழிலும் உணர முடியாத உன்னத விளக்கமாகத் திருப்புகழ்ப் பாடல்கள் தினகரன் திகழொளியெனத் துலங்கி விளங்கி வருகின்றன. இத்திருப்புகழ்ப் பதினாறு ஆயிரம் பாடல்கள்தொடங்கி இப்போது 1311 பாடல்களாக மட்டும் வாடாப் பொன்மலர்களாக இவ்வுலக அடியார்கட்குப் பயன் பட்டு வருகின்றன வள்ளி மணவாளப் பெருமானை வழிபட்டுய்வதற்கு.

இவ்வரிய பெரிய அழியாத பொக்கிஷத்தை வழங்கிய மகான் அருணைமுனிவர் அருணகிரிநாத சுவாமிகளாவார்கள். சற்குரு அருணகிரிநாத சுவாமிகள் வெறும் புலவரன்று. பெரும் புலவர்கள் திலகமாவார். காரணம் கந்தவேள் பெருமானின் காட்சியாம் திருவருள் மாட்சியைப் பெற்று தடுத்தாட் கொள்ளப்பட்ட கர்மயோகி மகானுவார். முருகப் பெருமானே "முத்தைத்தரு" என்று அடியெடுத்துக்கொடுத்து திருப்புகழ்பாடுக என அருளாசி பெற்றிட வழங்கியுள்ள மெய்ஞ்ஞானியாவர்.

அருணகிரிநாத சுவாமிகள் அப்பழுக்கற்ற அருந்தவ முனிபுங்கவராவார். இவர் காலத்தில் திருவண்ணாமலையில் தேவதாசிகள் அதிகம். கண்ட ஆண்களை யெல்லாம் தங்கள் காம வலையில் சிக்கவைத்து சிற்றின்ப சுகத்தை வளர்த்தவர்கள். அவர்கள் மோக வலையில் சிக்கி ஆண்கள் அழிந்து நலிந்து நோயுற்று வருந்துவதைக் கண்டும் கேட்டும் அருணகிரிநாத சுவாமிகள் ஐயோ! அறியாமையில் சிற்றின்பத்தில் சிக்கி அழிகின்றார்களே! என்று தன் மனம் வெந்து நொந்து மக்கள் அறியாமையைப் போக்கத் தாம் பாடிய திருப்புகழ்ப் பாடல்களில் அறிவுறுத்தி புத்தி புகட்டியுள்ளார். இம்முறையை இவருக்கு முன்னே தோன்றியுள்ள பட்டினத்து அடிகளார் சமயாசாரியர்கள் முதலான மகான்களின் பாடல்கள் தக்கசான்றாக அமையும். அருணகிரிநாதர் தம் சுய சரித்திரத்தைத் தாம் எழுதவில்லையே! எவரோ எழுதிய கற்பனை யூகம்தானே! மேலும் பாம்பன் சுவாமிகள் அவர்கள் திருப்புகழ் வண்ணச் சந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவாகும் இப்பாடல்களில் அருணகிரிநாத சுவாமிகள் முதல் நான்கு அடிகளில் சிற்றின்பக் கேட்டினை விளக்கிவிட்டு,பின் நான்கு அடிகளில் பேரின்பம் வழங்கும் பெம்மான் முருகன் பெருங்கருணைத்திறனை வியந்து வரைந்துபாடி ஓதியுள்ளார். இது மகான்கள் மரபாகும் முறைகளாகும் என்று வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது திருப்புகழ் ஆதீனகர்த்தராக விளங்கும் திருப்புகழ் தீர்க்கதரிசி திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் சற்குரு அருணகிரிநாத சுவாமிகள் குறித்துப் பின்வரும் பாடலில் அழகாக விளக்கியுள்ளார்.

அன்பர்கள் அனுதினமும் ஓதி குருவணக்கம் கூறி உய்வார்களாக.

விருப்புடன் உபய சரணமென் மலரை
  வேண்டுவார் வேண்டிய தளிக்கும்
பொருப்புகள் தோறும் நின்றரு ளொருவன்
  புகழினை அகநெகப் புகன்று
கருப்புகு தாத கதிதனைக் காட்டும்
  கலையுணர் புலவர்கள் திலகம்
திருப்புகழ் அருண கிரியெம தடிகள்
  திருவடி குருவடி வாமே.

மேலும் தாயினும் சிறந்த தவஞான சிவஞானச் செல்வர் தாயுமான சுவாமிகள்,

ஐயா அருணகிரி அப்பா உனைப்போல்
மெய்யாக வோர்சொல் விளர்பினர் யார்?

என்று வாக்கிற்கு அருணகிரிநாதர் அருள்வாக்கினை வியந்து வாழ்த்தியுள்ளார். என்பதனையும் சிந்திக்கத்தக்கதாகும்.

## திருப்புகழ் தியாகமணி

தலங்கள் தோறும் தேடிச் சென்று திருமுருகப் பெருமானைத் திருப்புகழ்ப் பாடல்களால் பாடிப் பணிந்துள்ளார் திருவருணை முனிவர் அருணகிரிநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் காங்கேய நல்லூர் கந்தவேள் கருணையால் வளர்ந்த கலையுணர் புலவர்மணி கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள் திருப்புகழுக்கு உலகில் ஒருப்புகழும் ஒப்பில்லை என்பதனை உணர்த்தப்பட்டார் குமரப்பெருமானால். தேர்ந்தார். தெளிந்தார். திக்கனைத்தும் சென்று திருப்புகழைப் பாடும் பணியாக ஏற்று பரப்பி திருமுருகப் பெருமான் பக்தியினை வளர்த்திடத் தம்மையே தியாகம் புரிந்துவிட்டார். இங்ஙனம் இவர் தம் ஏழு வயது பிள்ளைப் பிராய முதல் எழுபத்தெட்டு (78) முதுமை வயது வரையில் இயந்திரம் போன்று ஓய்வு ஒழிச்சலின்றி இரவும் பகலும் திருப்புகழுடன், சைவ சித்தாந்தம், சைவ, வைணவ புராண இதிகாசங்களையும் தெள்ளத் தெளிவாக மக்கள் உள்ளத்தே ஊன்றிப் பதியும்படி ஓதி உழைத்து வருகின்றார். தமிழகத்தில் மட்டிலுமல்ல, வடநாட்டுப் பெருநகரங்களிலும், இலங்கை, பர்மா, மலாயா, பாரீஸ், இங்கிலாந்து முதலான கடல் கடந்தும் சமய முழக்கம் புரிந்து வருகின்றார் திருமுருக கிருபானந்தவாரியாராம் திருப்புகழ் தீர்க்கதரிசியவர்கள். இத்துடன் திருப்புகழ்ப்பாடல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, உவமைநயவுரை, கருத்துரைகள் வரைந்து வாசிக்கும் அன்பர்கள் கருத்தில் முருகப்பெருமான் பக்திப்பெருக்கைக் களிநடம் புரியச் செய்துள்ளார்.

## கலை விளக்கக் கற்பகத் தரு

பள்ளிவாசலை மிதித்தறியாத பிறவியிலேயே மூளைத்த பேரறிவுக்கலைக் களஞ்சியமாகப் பிறங்குகின்றார் கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள்.

> கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல்.

என்னும் தமிழ்மறை வாக்கைத் தம்வாழ்க்கையில் மெய்ப்பித்தவர். உரைநடை நூல் எழுதுவதில் ஒப்பற்ற பேரறிஞர் என்பதனை அவர்தம் நூல்களை வாசித்தால் உணரலாம். கட்டுரைகள் வரைவதில் கலாவல்லுனர் என்பதனைப் பல ஆண்டு மலர்களில் கற்றுணரலாம். சிறுகதைகள் வரைவதில் சிறந்த கலை மேதை என்பதனை கற்புக் கதைகள் சொல்லக் கேட்டுணரலாம். கவிதை புனைவதில் கலியாண வாழ்த்துக்களிலும், திருமுருகப் பெருமான் வள்ளியம்பாள் தோத்திரப் பாடல்களில் கண்டு

களிக்கலாம். விரிவுரைகள் ஆற்றுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத விவேக சூடாமணியாக விளங்கக் காணலாம். அபிநயம் புரிவதில் ஆடல் அரசெனக் கண்டு ஆனந்திக்கலாம். இசை, ஆலாபனம் கலைகளில் ஏழிசை தேவகான சங்கீதமணி வித்வான்களும் சங்கீத பிர்மம் என்று ஏற்றி போற்றக் கேட்டு இன்புறலாம். புராண இதிகாச வரலாற்றுக் கவிதைகட்கு, அவைகளின் மூல ஆசிரியர்களும் காணாத ஆராய்ச்சி உவமை நயங்களைப் புதைபொருள் எனப் பெயர்த்துப் புகலும் பேராற்றலைக் கேட்கும்போது நாம் பொங்கி மகிழலாம் புளகாங்கிதத்தால். கூறும் கதாபாத்திரங்களாகவே தம்மை மாற்றிக் கொண்டு, உண்மையான உருக்கம் பெருக்கமாகக் காட்சி தரும் கட்டழகினைக் காணும்போது களிப்பில் மூழ்கலாம். நகைச்சுவையில் நல்ல மன்னராக நோக்கலாம். காட்சிக்கு எளியவர். கருணைக்குத் தக்கவர். தோற்றத்துக்கு தெய்வக் களை. அன்புக்குரியவர். ஆசிக்குப் பெரியவர். அருளுக்குத் தெய்வம். அடக்கத்துக்குப் பூமி. பண்புக்கு உறைவிடம். பக்திக்குப் புகலிடம். இங்ஙனம் எல்லாத் துறைகட்கும் ஏற்ற சகல கலா வல்லுனராக விளங்கி கற்பகத்தருவைப் போன்று காட்சி தருகின்றார் மாட்சி மாண்புடன்.

## கொடுப்பதில் கொடைவள்ளல்.

சில வித்துவான்கள் சொல்லக் கேட்டுள்ளேன். வித்துவான்கள் வாங்கத்தெரிந்தவர்களே யல்லாது வழங்கத்தெரியாதவர்கள் என்று. ஆயின் அருள்மொழியரசு வாரியார் சுவாமிகள் வழங்குவதில் வள்ளல் ஈட்டும் பொருளனைத்தும் தமக்கென எண்ணாதவர். எவர் வந்து கேட்பினும் அவர் தகுதியறிந்து ஈவார். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்பதன் வண்ணம் செயல்படுவர். சிறந்த நிறைந்த பரந்த சிந்தையுள்ளவர். ஏழை மாணவர்கள் பலருக்கு நிதியுதவி ஈந்து கலைப்பயிற்சியில் ஈடேற்றம் பெறவைக்கிறார். திருமணத் தம்பதிகட்கு ஒருமனப்பட்டு உதவுவார். ஆலயபணிகட்கு ஆனவரை அள்ளியளிப்பார். எவர் வந்து சிபார்சு கடிதம் வேண்டினும் இளைக்காமல் சளைக்காமல் எழுதி தருவார். உற்றவர்க்கு கற்றவர்க்கு உண்டி உடை உபசரித்து உதவுவார். ஏற்றவர்க்கு இல்லை யென்னாது இயன்றவரையில் ஈவார். இளகிய உள்ளம். எளிதில் நம்புவார். இரக்கமே உருவானவர். எனவே தமக்கென ஒன்றும் சேமித்து வைக்காது வந்தவை அனைத்தையும் வாரி வழங்கிவிட்டு வள்ளலாக வாழ்ந்து கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தொண்டே குறிக்கோளானவர்

தெய்வத்தொண்டினையே தம் குறிக்கோளாகக் கொண்ட தியாகச் செம்மல். காரணம் யாமறிந்த தொண்டுகளிலே தெய்வத் தொண்டினைப் போல் இனிதாவது எங்கும் காணோம் என்பதனை ஆய்ந்து, அறிந்து, தேர்ந்து, தெளிந்து மேற்கொண்டார்.

ஏனெனில் தெய்வம் எவருக்கும் எக்காரணத்தை முன்னிட்டும் தீங்கு செய்யார். தெய்வம் உய்ய வைத்தருளும் தன்மையது. தெய்வம் ஒழியாப் பிறவித்தளையை ஒழித்து தெய்வ நலம்பெற வைத்தருளும். எனவேதான் எல்லாத் தொண்டுகளிலும் தெய்வத் தொண்டு ஏற்றது என்று நம் திருமுருக சுவாமிகள் பிள்ளை வயதில் பத்தியுணர்வு ஏற்பட்ட நாள் தொட்டு, எம்பெருமான் வள்ளி மணவாளப் பெருமானை வழிபட்டும் தினந்தினம் பச்சியில் வளர்பிறையென குருமணியாக வளர்ந்து கொண்டுள்ளார். இரவு பகல் என்றெண்ணாது பூஜை வழிபாட்டை சிரத்தையுடன் வழுவாது நழுவாது ஆற்றி, திருக்கோயில் திருப்பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டுள்ளார். இம்மாமுனிவர் மன்னர் ஆற்றியுள்ள திருக்கோயில் திருப்பணிகள் நாற்றுக்கணக்கிலும் மேற்பட்டவையாகும்.

விரிந்து வரைய விரியும் என அஞ்சுகின்றேன். அடியேன் சுவாமிகள் பொன்விழா மலரிலும், பிறபூஜை தேவார நூல்களிலும் விளக்கமாக வரைந்துள்ளேன். மூவேந்தர்களும், பாவேந்தர்களும் ஒரு சில திருக்கோயில் திருப்பணிகள்தான் புரிந்துள்ளனர். நாவேந்தரான நடமாடும் நம்கால தெய்வ மணி சுவாமிகள் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில் திருப்பணிகள் ஆற்றியுள்ளார். பின்வரும் இவருடைய பாடலில் வாரியார் சுவாமிகள் தம் மனோபாவத்தை அப்படியே படம் பிடித்துக் காண்பித்துள்ளார். அன்பர்களாகிய நாம் படித்துப் பாராயணஞ் செய்து அவரைப் பின்பற்றுவோமாக.

பாராண்ட பார்த்திபரின் பதவியு நான் வேண்டேன்
பங்கயன் மால் இந்திரனார் பதவிகளும் வேண்டேன்
சீராண்ட செல்வமுமா நன்னிலபுலமும் வேண்டேன்
சித்தாந்த வித்தகரின் திருவடியை வேண்டும்
பேராண்ட அடியவர்தம் அடிமையாய்ப் பிறங்கும்
பெருமையினார் திருவடித்தாள் வேண்டும் இளம்பிடியே
வாராண்ட குயமடவள் கற்புநெறி வளரும்
வள்ளிக்கிலே மயிலிறைவன் மகிழ மனோன்மணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துணை நற்றுணைத் தெய்வீகக் குருமணியை உள்ள வரையில் வரவழைத்து, வரவேற்று, வாழ்த்தி வணங்குகின்றோம். ஆயின் இத் தெய்வீகத் திருப்புகழ் தியாக மணியாம் குருமணியை என்றும், இவரது நன்மரபை, உபதேசங்களை; வழிகாட்டுதலின் மேலான மார்க்கங்களை நினைவாலயமாக, உலக மக்களின் உயர்ந்த தாய்ப்பீடமான வெள்ளிமலையில் இப்போது திருப்புகழாதீனமாகக் குருகுலம் இவர் பெயரால், இவர் வழிபடும் தெய்வமாம் திருமுருகப் பெருமான் ஆறுபடைவீடு அமைப்பினை வள்ளியம்மை தவப்பீடமும் திருப்பணிக்கட்டிடம் அன்பர்களால் உருவாக்கப்பட்டுக்கொண்டுள்ளன. இப் புனித நினைவாலயம் மூலம் சுவாமிகள் தொண்டுகளிலும், நூல்களிலும் உபதேசங்களிலும் புகழும் என்றும் நின்று நிலவவேண்டும் என்பதே அடியேன் குறிக்கோளாகும். வாழ்க வளர்க வாரியார் சுவாமிகள் தெய்வீக மரபு நலம் பெறுவோமாக.

வேலும் மயிலும் துணைபுரிக

---

வாரி தன்னை வாரி மழை வழங்கும் மேகம் என உரைகள்
 வழங்கி. முருகன் திருக்கருணை மன்னும் முருக கிருபானந்த
வாரி யார்தம் போற்றல் மண்மேல் அறியார் அறியாரே
 வன்மைச் சாற்றல் நினைவாற்றல் மன்னும் கவிதை சொல்லாற்றல்
யாரில் மேலாம் இசையாற்றல் பண்பார் ஒழுக்கம் பூசை செயும்
 பற்று மேவும் திருக்கோவில் பணிகள் செய்யும் பாங்குடனே
பாரில் நிகரில் பகர்ந்திடற்கு பலவும் சேர்க்காண்கில் லம்
 பகர்தண் டமிழ்மேன் இருவருளால் பல்லாண்டினிது வாழியவே

வெண்பா

சொற்றவறாத் தன்மை சொலல்வன்மை பூசை செயும்
பற்று மற்ற மேலாகும் பண்பனைத்தும் — உற்றமைந்த
வாரியார் இவ்வுலகில் மன்னும் நலத்துடனே
சீரிலவ வாழ்க செழித்து.

ஆனந்த வாரியிடை ஆர்த்தசபை யார்தம்மை
தானநரு மற்றமுறை தான்கூட்டம் — ஞான
முருகிருபானந்த வாரியார் செவ்வேள்
திருவருளால் வாழ்க தினம்.

தெய்வப் புலவர் திருமுருகன் தண்ணருளால்
உய்யும் பலகலையும் உற்றுணர்ந்தே — கைவந்த
வாரியார்சுவாமிகள்போல் மற்றுரைக் கூறிடலாம்
பாரில் இல்லை உண்மை பகர். —தவத்திரு சுந்தரசுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாரி" யார்?

(கலாநிதி சரஸ்வதி இராமநாதன் - பள்ளத்தூர்-தமிழ்நாடு)

வாரி என்றால் கடல்.

அருள் வாரி, ஆனந்த வாரி, தமிழ் வாரி, பக்தி வாரி, அன்பு வாரி-யாக இருந்து அனைவர் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றுள்ளவர் திருமுருக கிருபானந்த "வாரி"யார்.

'வாரியார் சுவாமி' என்று அன்போடும், பக்தியோடும் நாங்கள் போற்றும் சுவாமி அவர்கள் உண்மையில் மகாமனிதர். அவரைப் பற்றி எளியவள் நான் புகழ்வது, அவர்மீது கொண்ட நன்மதிப்பாலும் பக்தியாலும் தானே தவிர என் தகுதியால் அல்ல.

## புன்னகை மன்னர்

கள்ளங் கபடற்ற புன்னகை முகம் சுவாமியின் அன்பு முகம். அண்ணல் காந்தியின் இளமைக் கோலத்துப் படங்களை விட பொக்கை வாய்க் காந்தி படத்தில், அந்தச் சிரிப்பில் அழகு அதிகம். அதுபோல, வாரியார் அவர்களின் சிரிப்பு. கள்ளங் கபடமற்ற, தெய்வீகமான சிரிப்பு எனலாம். எப்போதும் நல்லதை எண்ணி, நல்லதை பேசி, நல்லன செய்யும் நல்லவரின் சிரிப்பு வேறு எப்படியிருக்கும்?

## சமயத் தொண்டர்

நான் பள்ளிச் சிறுமியாகச் சிதம்பரத்திலிருந்த போதே சுவாமி அவர்களின் பிரசங்கம் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். இளமையாக்கினார் கோயில் என்னும் திருப்புலீச்சுரத்தில் கார்த்திகைச் சொற்பொழிவு நடத்த சுவாமி வருவார்கள். அப்போதெல்லாம் சுவாமி பிரசங்கத்திற்கு இப்போதுபோல ஆயிரக்கணக்கில் மக்கள் கூடியதில்லை. ஒரு மண்டபத்தில் மட்டும் கூட்டம் இருக்கும். புதுபுது நயம் காட்டி, நேரம் போவது தெரியாமல் பேசி, மக்களை ஈர்த்து மாபெரும் கூட்டத்தைக் கூட்டி, தனக்கென எங்கு சென்றாலும் பக்தர் குழாத்தை (இரசிகர் என்று மட்டும் சொன்னால் போதாது) ஏற்படுத்திக் கொண்டு, சமயம் பரப்பும் இவரை இந்த நூற்றாண்டின் 'அப்பரடிகள்' என்று சொல்லலாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயச் சொற்பொழிவு கேட்பதற்கு மக்களுக்கு வழி காட்டிய முதல்வர் அருள்மொழியரசர்தாம். இன்று என் போன்ற எளியவர்களும் மேடையில் பேசுகிறோம் என்றால் பாதை போட்டுத் தந்தவர் சுவாமிதான்! வாய்ச்சொல்லால் மட்டுமா சமயப்பணி நடத்துகிறார்? எத்துணை திருப்பணிகள்! எத்துணை குடநீராட்டு விழாக்கள்! சுவாமிகள் அருமுயற்சியால் நடைபெற்றுள்ளன. சமய உலகம் வாரியார் சுவாமியை மறக்கமுடியுமா? 'திருப்பணிச் செல்வர்' இவர்.

## சமுதாயப்பணி

பாமரரும், பண்டிதரும் ஒருசேரக்குழுமி, கவலை மறந்து வாய்விட்டுச் சிரித்து, ரசித்து, சமய உண்மைகளைப் புரிந்து கொண்டு போற்றும் வண்ணம் செய்து சமுதாயத்திற்கு நற்பாதை வகுத்துத்தருபவர் சுவாமி அவர்கள். படிக்கும் ஏழை மாணவர் பலருக்கு உதவித் தொகை தந்து ஊக்குவித்துக் கல்விக்கண் திறக்கும் நற்பணியும் செய்கிறார். 'இராமகிருஷ்ணு குடிலுக்கு' சுவாமி ஒருபுரவலர் போல விளங்குகிறார். ஆக சமுதாயப்பணியிலும் யாருக்கும் வழிகாட்டி நிற்கிறார் இந்த 'வாரி'யார்!

## பரந்தமனப் பண்பாளர்

சுவாமி இந்த வயதிலும் இப்படிச் சளைக்காமல் பணி செய்ய அவருக்கு ஊக்கம் தருவது அவரது பக்தியே! 'சொல்வது எல்லோர்க்கும் சுலபம்—சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்'—ஆனால் பிறருக்கு உபதேசிப்பது போல வாழ்பவர் சுவாமி! பிறரிடம் உள்ள சாதாரணப்பண்பையும், புகழ்ந்து, எடுத்துக்கூறும் பண்பாளர் சுவாமி. மற்றவர்களுக்கு என்ன தெரியும் என்று அகந்தை கொள்ளாத பண்பு சுவாமியினுடையது! அதனால் அவர் மேலும் அருட்செல்வராகிறார்.

"எல்லார்க்கும் நன்றும் பணிதல்—அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து" அல்லவா!

ஆகவே சுவாமிக்கு இறையருளும், மக்கள் அன்பும் பெருக்கம் தந்து ஆணை நிற்கின்றன. இறைவன் திருவருளால் சைவம் தழைக்க; அடியார் கூட்டம் பெருக, அன்புநெறி ஓங்க, "இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்" என்று (வாழ்த்த எனக்கு வயதில்லையாதலால்) அன்பால் வணங்கி மகிழ்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவதியார் வழிவந்த
# புதுமைப் பெண்

— வை. சொக்கலிங்கம் —
(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்–சட்டத்தரணி–தெல்லிப்பழை)

திருமூலர் தனது திருமந்திரத்தில்

"ஊரினைக் கூட்டி ஒலிக்க அழுதிட்டு
பேரினை மாற்றிப் பிணம் என்று பெயரிட்டு"

என்று வாழ்வில் எல்லார்க்கும் நடக்கும் பெயர் மாற்றம் ஒன்றை விபரித்துள்ளார். ஆனால் அண்மையில் மறைந்த அம்மையாரின் வாழ்விலே அவரின் பெயர் பல மாற்றங்கட்கு உள்ளாகி அவ்வப்போது அவற்றால் செல்லமாக மக்களால் அழைக்கப்பட்டார். மங்கைப் பருவத்தில் "சரஸ்", இல்லறத்தில் புகுந்ததும் "சரஸ்வதி", பின் துறவு நிலையில் "சரஸ்வதி அம்மையார்", இறுதியாக "சுவாமி அம்மா" என எல்லோராலும் அழைக்கப்பட்ட இந்த இல்லற ஞானியின் வாழ்க்கையில் நடந்தேறிய சில சம்பவங்களை ஆராய்ந்தால், அவரது நற்பண்புகளும், எதற்கும் அஞ்சாத மனோநிலையும், இதயத் தூய்மையும், பக்தி வைராக்கியமும் தெள்ளிதிற் புலப்படும்.

இவரது வாழ்க்கை பலவிதத்திலும் சேக்கிழார் கூறும் புனிதவதியாரின் வாழ்க்கையை ஒத்திருப்பதை உணரலாம். இவர்கள் இருவருமே இளமையும் அழகும் கொலுவீற்றிருந்த அவர்களது இளமைப் பருவத்திலேயே அவற்றைத் தியாகம் செய்த இல்லத்தரசிகள். முன்னையவர் கணவனுக்குத் தேவைப்படாத உடலழகும் இளமையும் தனக்கு வேண்டியதில்லை என உதறித் தள்ளியவர். பின்னையவர் தன் ஞான வாழ்விற்கு குறுக்கேநிற்கின்றவை என்ற காரணத்திற்காகத் தன் இளமையையும் அழகினையும் தூக்கி எறிந்தவர். முன்னவர் "பேய் வடிவு" வேண்டிப் பெற்றவர். பின்னவர் "வெள்ளை ஆடை"யை வேண்டிப் பெற்றவர். இருவரும் தமது கணவன்மாராலேயே தெய்வம் எனப் போற்றப்பட்டவர்கள்.

முன்னவரின் கணவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மானுடம் இவர் தான் அல்லர்
நற்பெரும் தெய்வமாதல் நானறிந்து அகன்றேன்"

என்றார். பின்னவருடைய கணவரை அவரது நண்பர் ஒருவர் அவர் மறுமணஞ் செய்து மகிழ்வுடன் வாழ்ந்தபோது அவரை விலக்கி வைத்த "சரஸ்" எப்படிப்பட்டவர் என்று கேட்டார். அப்போது அவர் மிக விநயத்துடன் அளித்த விடை "அது ஒரு தெய்வப் பிறவி" என்பதேயாகும். ஆம்! கணவருக்கு "அவள் ஒரு தெய்வப் பிறவி" என்று கூடச் சொல்லமுடியவில்லை. "அது" ஒரு தெய்வப் பிறவி என்ற வார்த்தையில் உள்ள அர்த்தபுஷ்டியை நாம் அவதானிக்கலாம்.

மேலும் புனிதவதியாரிலும் பார்க்க இன்னும் ஒருபடி மேலே போய் தனது துறவு தன் கணவனின் இல்லற இன்பத்தை கெடுத்துவிடக்கூடாது என்ற பெருநோக்குடன் அவருக்குத் தானாகவே ஒரு பெண் தேடித் திருமணம் செய்து வைத்தார் என்றால் அவரது தியாகத்தின் பெருமைதான் என்னே!

மங்கைப் பருவத்திலேயே இறைவன்பால் தன் மனதைத் திருப்பி அல்லும் பகலும் ஞானவாழ்விற்கும் இறையருளுக்கும் ஏங்கிக் கிடந்த சரஸ்வதிக்கு ஏதோ பிராரப்த விதிவசத்தால் அவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். ஆனால் அவருக்கோ திருமணவாழ்வு சுகந்தரு இல்லறத்தை நீக்கி துறவை மேற்கொண்டு இந்தியாவிற்குச் சென்று யோகியர்களிடமும் ஞானியர்களிடமும் அடைக்கலம் புக எண்ணி இருந்தார்.

அதற்குள்ளாக குழந்தை 'தங்கேஸ்வரி' பிறந்து விட்டாள். அன்னையின் மனதில் அளப்பரிய போராட்டம். வீட்டை விட்டு வெளியேற முடிவுகட்டும் போதெல்லாம் திரும்பிக் குழந்தையின் முகத்தைப் பார்த்ததும் தன் முடிவினை மாற்றிக் கொள்வார். தன் குழந்தையையும் தன் தமக்கையாரின் குழந்தை சிவபூஷணத்தையும் வளர்த்துவிடும் பொறுப்பும் கடமையும் தன்மீது சுமத்தப்பட்டிருப்பதை உணர்ந்ததும் மனம் மாறிவிடுவார். இறுதியில் தாய்ப்பாசமும் கடமையுணர்ச்சியும் அவர் விரும்பிய ஆசிரம வாழ்க்கையை தேடி ஓடாது தடுத்து நிறுத்தி விட்டது. எனவே இல்லறத்தில் இருந்து கொண்டே துறவு வாழ்க்கை வாழத் தலைப்பட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவு வாழ்க்கை அனுஷ்டிக்கத் தொடங்கியதும் மணி மேகலையைப் போன்று மக்கட்கும் பசித்துன்பம் போக்கும் பணியினை அறத்தினை மேற்கொள்ளும்படி இவருக்கு குரு வாக்கு கிடைத்தது. ஓர் நாள் யாழ்ப்பாண நகரிலுள்ள பெரிய கடை வளவில் 'விசரன்' எனப் பலராலும் விரட்டப்பட்ட வரும், உலகிற்குத் தன் நிலை காட்டாது விசர்க் கோலத்தில் நீண்ட நெடுங்காலம் பெரியகடையை சுற்றித் திரிந்தவரு மான ஞானியாகிய ஆறுமுக சுவாமியைப் பார்க்கவேண்டும் என்று அங்கு சென்றார். மாலை 5 மணியளவில் சென்றவர் சுவாமியின் பாதத்தைத் தொட்டு வணங்கினார். கூப்பிய கை களுடன் வெகுநேரம் அவர் முன்னிலையிலேயே நின்றார். அவரின் வாக்கு ஏதாவது பெற்றுவிடவேண்டுமென்ற ஆவல். சுவாமியார் ''போ! போ! போடி!'' என்றெல்லாம் விரட்டினார். இவர் அசைந்த பாடில்லை. சுவாமியார் தியானத்தில் ஆழ்ந் தவர் போல் கண்களை மூடிவிட்டார். சுமார் இரு மணித் தியாலங்கள் கழித்து சுவாமியார் விழித்தார். அப்போதும் இளமங்கை ''சரஸ்வதி'' அப்படியே கூப்பிய கரங்களுடன் தன் முன்னே விநயத்துடன் நிற்பதைக் கண்டு வியப்படைந் தார். அப்போது தான் முகமலர்ந்து ''போ! போ! போய்த் தருமம் செய்! வேறொன்றும் தேவையில்லை'' என்றார். தன் நோக்கம் நிறைவேறிவிட்டது. குருவாக்குக்கிடைத்துவிட்டது என்னும் பெரு மகிழ்வுடன் சுவாமியாரின் திருவடிகளை மீண் டும் தொட்டு வணங்கிவிட்டுத் திரும்பிவிட்டார். அன்று தொடங்கியது அவரது அறம் செய்யும் பணி. அடிக்கடி அவர்,

''இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெரும் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது''

என்னும் மணிமேகலை வாக்கியத்தை உச்சரிப்பார்.

எந்த நாளும் எந்த நேரமும் அவர் வீட்டிற்கு வரும் மக்கள், பாமரர்கள், அடியார்கள், சுவாமிமார்கள், யாபேர்க் கும் உணவளித்து உபசரிப்பார். அவர்தம் செல்வம் சுருங் கியகாலத்தும் தர்மம் செய்வதில் தயக்கம் காட்டியதே இல்லை.

இவர் செய்த தருமத்தின் பெருமையை உணர்த்தி நின்ற இன்னொரு சம்பவம் இப்போது நினைவிற்கு வருகின்றது. மரணப்படுக்கையில் வீழ்ந்து பல மாதங்களாகியும் அவரை அணுகக் காலனுக்கு முடியாமற்போய்விட்டதெனக் கேள்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட போது நான் அதிசயப்படவில்லை. உடனே என் மனதில் யுத்தகளத்தில் அர்ச்சுனனின் அம்பால் அடிபட்டு மரணப் படுக்கையில் வீழ்ந்துகிடந்த கர்ணனுடைய கதைதான் ஞாபகத்திற்கு வந்தது. அர்ச்சுனன் சரமாரியாக பாணங் களைப் பொழிந்தபோதும் வீழ்ந்துகிடந்த கர்ணனைத் தாக்க முடியவில்லை. அப்போது கண்ணன் பார்த்திபனை நோக்கி 'உனது பாணங்களால் இனிப் பிரயோசனமில்லை. கர்ணன் தன் வாழ்நாள் முழுதும் செய்த தர்மம் அவனைக் காத்து நிற்கிறது. தர்மதேவதை அவனைச் சுற்றி சரக்கூடு வியூகம் அமைத்து விட்டது. ஆகவே எதுவுமே செய்ய முடியாதென' விளக்கம் கொடுத்தான். பின் கண்ணன் அந்தண வடிவம் பூண்டு கர்ணனிடம் சென்று அவனது 'தர்மத்தை' தானம் செய்து தரும்படி கேட்டு, கொடைவள்ளலாய அவன் அதைத் தானம் செய்து கொடுத்தபின்தான் அவனது ஆவியைப் பறிக்க அர்ச்சுனனால் முடிந்தது. அதேபோல் அம்மையா ரும் மரணப்படுக்கையிலும் தன்னைக் காத்து நின்ற தர்மத்தை அவர் 'தானம்' செய்துவிட்ட பின்தான் காலனால் அவரை அணுக முடிந்ததென்றால் அறத்தின் பெருமையும் குருவாக் கின் வலிமையும் தெள்ளிதிற் புலப்படுகின்றதன்றோ?

தன் இளவயதிலேயே நல்ல தமிழ்க் கல்வியும் சமய அறிவும் பெற்ற இவர் பின் பல சித்தாந்த, வேதாந்த உபதேசங்களை யெல்லாம் கொழும்புத்துறை யோக சுவாமியாரிடமும் அவ ரது அருளுக்குப் பாத்திரமான "இராசையா" சுவாமியாரிட மிருந்தும் பெற்றுக்கொண்டார். சரியை கிரியைகளிலே அவ் வளவு நாட்டங்கொள்ளாத இவர் பிராணயாமம், தியானம், நிஷ்டை முழுவதும் கைவரப் பெற்றவராய் விளங்கினார். இரவு முழுதுமே தியானத்தில் ஆழ்ந்திருக்கக்கூடிய சக்தியும் பெற்றிருந்தார். சித்தாந்த சாஸ்திரங்களிலும் பார்க்க வேதாந் தக் கொள்கைகளையே பெரிதும் விரும்பிய இவர் திருமந்திரம், பதினெண் சித்தர் பாடல்கள், கைவல்ய நவநீதம் ஆகிய நூல் களைப் படித்து பலகாலும் மனனம் செய்பவராயிருந்தார். ஒன் றுமே தெரியாதவர் போல இருக்கும் இவர் தக்க தருணத்தில் உதிர்க்கும் அவரின் வார்த்தைகொண்டு அவரது அறிவுத் திறனை யாரும் அறிய முடிந்தது.

ஓர் நாள் காவியணிந்த இரு அடியார்கள் அவரது மனைக்கு வந்தனர். அவர்களை உபசரித்து உணவு பரிமாறி னார். உணவை அருந்திக்கொண்டிருக்கும் போது ஒருவர் இவர் பரிமாறிய சொதிக்குத் தேங்காய்ப்பால் குறைவாயிருந்

ததை மற்றவருக்கு மெதுவாகச் சொன்னார். இதை சமையற் கட்டிலிருந்து வந்த அம்மையார் கேட்டாரோ என்னமோ உடனே,

''மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்கு
தேங்காய்ப் பால் ஏதுக்கடி? குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி'' என்றார்.

அடியார்கள் திகைத்துப் போய் அவரிடம் மன்னிப்புக் கேட்டார்கள்.

அவரது வாழ்க்கையில் போலிச்சாமிமார்களையும் ஆஷாட பூதிகளையும் அடையாளங்கண்டு அவர்களை விலக்கிவிடும் ஆற்றல் அவரிடம் அபரிமிதமாயிருந்தது. அத்தகைய ஒருவரிடம் ''கொக்கு என்று நினைத்தாயோ, கொங்கணவா?'' என்று கேட்டு அவரை வாயடைக்கச் செய்த சம்பவமும் உண்டு.

மேலும் பாரதியார் தன் புதுமைப் பெண் படைப்பிலே

''நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்குமிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்.

என அவளை வர்ணித்தார். இவை முழுதுமே சரஸ்வதி அம்மையாருக்கும் பொருந்தும். அவரது நன்னடையும், நேர்மை நோக்கும், அஞ்சாமையும் ஞானச் செருக்குமே ஒன்று சேர்ந்து திறம்புதலற்ற செம்மை மாது ஒருவராக அவர் திகழ்ந்திருந்தார். பெருமைமிக்க சுவாமியம்மாவாகப் பரிணமித்தார். எனவே புனிதவதியாரின் தியாகத்தையும், பக்தை மீராவின் இறை நாட்டத்தையும், மணிமேகலையின் ஈதலறத்தையும் பாரதியின் புதுமைப்பெண்ணின் ஞான நல்லறம், வீர சுதந்திரம் ஆகியவற்றையும் ஒருங்கே பெற்று மங்கையருலகிற்கு கலங்கரை விளக்கமாயமைந்த சரஸ்வதி அம்மையார் இல்லற வாழ்க்கையில் இருந்துகொண்டே துறவறத்தை மேற்கொள்ளலாம் என வாழ்ந்து காட்டிய துணிச்சல் மிக்கவீராங்கனை. இன்றுமண்ணிலிருந்துமறைந்துவிட்டாலும் சான்றோர் உள்ளங்களிலும் வரலாற்று ஏடுகளிலும் நிச்சயமாக நின்று வாழ்வார்.

அவரது ஆன்மா சாந்தியடைவதாகுக!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ராமதாஸ் அருளுரைகள்

# வேண்டுவது ஒன்றுண்டானல் அதுவும் இறைவன் ஒன்றே!

தமிழ் வடிவம் ம. சி. சிதம்பரப்பிள்ளை

ஒரு காட்டில் வசித்துவந்த சாதுவுக்குத் தனது குடிசையைப் பழுது பார்ப்பதற்குப் பொருள் தேவையாக இருந்தது. அண்மையில் உள்ள இராச்சியத்துக்குச் சென்று அரசனிடம் தேவையான உதவி கேட்பதற்காகச் சென்ருர். அவ்வாறு சென்று அரசன் எங்கே இருக்கின்ருர், அவரைக் காணவேண்டும் என வினவி நின்ருர். அரண்மனை அமைச்சர் சாதுவை வரவேற்பு மண்டபத்தில் அமரும்படி பணித்து, அரசன் பிரார்த்தனை செய்கின்ருர் என்பதனையும் தெரிவித்தார். சாது அமர்ந்த வரவேற்பு மண்டபத்தின் அருகாமையிலேயே வழிபாட்டு அறையும் இருந்தது. அரசனுடைய வழிபாடு சாதுவுக்கு மிகவும் துல்லியமாகக் கேட்கக் கூடியதாக இருந்தது: "ஆண்டவனே! அகில உலகத்துக்கும் நாயகராக விளங்கும் தேவனே! எனக்குத் தேவையான செல்வத்தையும் சுபீட்சத்தையும் இன்றுள்ள நிலைமையிலும் கூடத் தாராளமாக அள்ளி அள்ளி வழங்குக! தங்கள் கருணை மழை என்மீது பொழியவேண்டும் என மீண்டும் மீண்டும் வேண்டுகின்றேன். எனது வேண்டுகோளை நிறைவேற்றவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்." இந்தப் பிரார்த்தனையைச் செவிமடுத்த சாது சடுதியாகத் தமது இடத்திலிருந்து எழும்பிச் செல்வதற்கு ஆயத்தமானுர். அரசனும் தனது பிரார்த்தனை முடிந்து வரவேற்பு மண்டபத்துக்கு வரவும், சாது செல்வதனைக் கண்டு "வந்த காரணம் என்ன?" என்று வினவ, எனது குடிசையைப் புதுப்பிக்கப் பணம் கேட்டுப் பெற்றுப்போகலாம் என்று இங்கு வந்தபோது, இறைவனிடம் மன்ருடித் தாங்கள் மேலும் மேலும் திரவியம் வேண்டும் என்று பிச்சை வேண்டி நிற்கும் பிச்சைக்காரனிடம் நான் எவ்வாறு பிச்சை வேண்டிப் பெறுவது! அதுதான் நான் நேரே அந்த அற்புத சக்தியிடம் பிச்சை கேட்போம் என்ற நோக்கத்துடன் செல்கின்றேன் என்று கூறி அகன்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் பல்கலைக் கழகம்

— தவத்திரு சுந்தரசுவாமிகள் —
(கௌமார மடாலயம், கோவை-6)

பலகலைகளுக்கும் உரிய கல்லூரிகளைத் தன்னிடம் கொண்டு விளங்குவது பல்கலைக்கழகம். மொழி, இலக்கியம், வரலாறு, கணிதம் இவை கலைக்கல்லூரியில் சொல்லித்தரும் பாடங்கள். மருத்துவம் மருத்துவக் கல்லூரிப் பாடம். இசை இசைக் கல்லூரிப் பாடம். சட்டம் சட்டக் கல்லூரியில் சொல்லித்தரும் பாடம். தொழில் தொழில்நுட்பக் கல்லூரிப் பாடம். பொறியியல் பொறியியற் கல்லூரியின் பாடம். விவசாயம், தாவர ஆராய்ச்சி, பௌதிக ஆராய்ச்சி மற்றும் பல பகுதிகளையும் கொண்டு விளங்குவது பல்கலைக் கழகம்.

ஒருவர் இசையில் வல்லவராக இருப்பார். நன்றாக இசையை அனுபவித்துப் பாடுவார். ஆனால் பாடலின் பொருளை அனுபவிக்கும் அளவு குறைவாக இருக்கும்; பாட்டின் பொருள் உணர்ந்து இசை நுணுக்கமும் அறிந்து அநுபவிப்பவருக்கு குரல் வளம் இருக்காது. எல்லாம் அமைந்தவர் உரை நடையாக அவற்றை எடுத்துக்கூறும் ஆற்றல் இருக்காது. சில இசைவாணர்கள் இசையின் இடையில் பேசினால் இவர் ஏன் பேசினார் என்று வெறுப்பு ஏற்படுமாறு இருக்கும்.

மேடையில் பேசுபவர்கள் கேட்பவர்களுடைய குறிப்பறிந்து பேசவேண்டும். கூட்டத்தில் உள்ள அனைவரும் ஏதாவது ஒரு வகையில் பேச்சுக் கேட்டதைப்பற்றிச் சிந்திக்கும் முறையில் இருக்கவேண்டும். சிலர் பேசினால் பேசும்போது சிந்திக்கவேண்டிய செய்தியில்லாமல் கேட்பவர்கள் தூங்கிவிடுவார்கள். பேசுகின்றவர்கள் எல்லாச் சுவையும் பொருந்தப் பேசவேண்டும். இலக்கியச் சுவை, நகைச்சுவை, தத்துவக் கருத்துக்களை எளிதாகப் புரியும்படி உதாரணங்களுடன் கூறுதல், கூறியவற்றைத் தொகுத்துக் கூறுதல், தலைப்பை விளக்குதல் ஆதிய அமைப்புடன் பேசுபவர் மிகச் சிலரே. அவ்வாறு பேசுபவர்கள் ஏராளமான பாடல்கள் மனப்பாடம் செய்திருக்க வேண்டும், குறிப்பு ஏதும் வைத்துக்கொள்ளாமல் பேசவேண்டும். அப்படிப்

பேசுகின்றவர்கட்கு இசை இருக்காது. உடலும் பேச்சாளருக்கு வளமாக இருக்கவேண்டும். அனைத்தும் அமைந்தாலும் பண்பு, ஒழுக்கம் சொன்ன சொல் தவறாமை கடவுள் பக்தி அனைத்தும் இருக்க வேண்டும்.

இவை எல்லாம் அமைந்தால் கற்ற வித்தையைவிட அனுபவம் தலைதூக்கும். அவை அறவே முளைக்கக்கூடாது. தான் பிறர்க்குக் கூறும் நீதியைத் தான் கடைப்பிடித்து நடப்பவராக இருக்கவேண்டும். புலமை அமைந்தவர்கள் ஒழுக்கத்தில் தவறி விடுகிறார்கள். கடவுள் பக்தி பூசை எல்லாம் மேடையில்தான் கூறுகிறார்கள், காலத்திலே தொடங்குவதும் காலத்திலே பேச்சை முடிப்பது சொற்பொழிவாளர் மேற்கொள்ள வேண்டிய ஒன்று. அவை விரும்பினால் மேலும் அதே தலைப்பின் பொருளுக்கு விளக்கம்தரல் வேண்டும்.

*''ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றும்—புலவர்*
*வார்த்தை பதினாயிரத் தொருவர்''*

என்பது ஔவையார் வாக்கு.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் தெய்வப் புலமை திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், அவருக்கு நிகர் அவரேதான்.

இன்னிசை, வீணை, மருத்துவம், மனையியல், மக்கட் பண்பு, சைவசித்தாந்த நுண்பொருள் விளக்கம், வரலாறு, திருமுறைகள், திவ்ய பிரபந்தம், கீர்த்தனைகள், அருணகிரி நாதசுவாமிகள் பாடல்கள் அனைத்திலும் திறமை மிக்கவர் வாரியார் சுவாமிகள்.

புராணக் கதைகளை வைத்துச் சமயத்தைக் குறைகூறும் அரசியலில், புராணக் கதையைக் கொண்டே இன்றைய அரசியலாளர்கட்கும் அறிவுரை கூறுபவர்.

ஒரு குடும்பத்தின் வாழ்வில் தாய், தந்தை, மகன், மகள், மருமகன், மருமகள், மாமன், மாமி சுற்றம் என்ற அனைவரும் எப்படி வாழவேண்டும் என்று கூறுவதில் தன்னிகர் இல்லாதவர்.

மனையியலில் கல்லூரியில் சொல்லித்தர முடியாத அளவு விளக்கம் தருபவர். உணவு சமைக்கும் கலை, விருந்தோம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய உலகம் பின்பற்ற வேண்டிய அனைத்தும் கூறும் திறமை வாய்ந்தவர்.

நாளும் இன்னிசையுடன் தமிழ் பரப்பும் பல்கலைக்கழகமாகிய வாரியார் சுவாமிகள் 50 ஆண்டுக் காலத்தில் மேடையில் பேசாத நாளே இல்லை. எத்தனை தொலைவாக இருந்தாலும் குறித்த வண்ணம் எந்த வாகனமாக இருந்தாலும் தவறாது சென்று உரை நிகழ்த்தும் இயல்பினர்.

தாம் செய்துவரும் பூசையை எக்காரணம் கொண்டும் தவறாமல் கேதாரம், பத்திரிநாத், அமர்நாத் முதலிய எல்லா இடங்கள் சென்றபோதும் எடுத்துச்சென்று முறையாகப் பூசைமுடித்த பின்பே உணவு செய்யும் முறையினர். சிவராத்திரி, மாதசஷ்டி போன்ற நாட்களில் எந்த ஆகாரமும் உட்கொள்ளாது விரதம் இருப்பவர்.

யார் கடிதம் எழுதினாலும் தவறாமல் உடனுக்குடன் பதில் எழுதுபவர். திருமண அழைப்போ விழா நிகழ்ச்சியோவந்தால் ஒரு மணித்துளியில் ஒருவெண்பா எழுதி அஞ்சலட்டையில் அனுப்பி வைக்கும் இயல்பினர்.

பிரசங்கம் முடிந்து இரவு 12 மணி ஆனாலும் எத்தனைபேர் திருநீறு கேட்டாலும் முகமலர்ச்சியுடன் தந்துகொண்டே இருப்பார்.

அளவான உணவு, கட்டுப்பாடான வாழ்க்கை, ஆடம்பர மற்ற முறை, சோம்பல் இன்றி எந்நேரமும் தபால் எழுதுவது, வந்தவர்களிடம் பேசுவது, பேசிக்கொண்டிருக்கும் போதே தபால்கள் பார்த்துப் பதில்கள் எழுதுவது, திருக்கோவில் திருப்பணி நன்கொடைக்காகச் செல்லும் இடங்களில் அவர்கள் உள்ளம் திருந்தி மனமகிழ்ச்சியுடன் உதவுமாறு பேசுவது. உடம்பாலும் கண்களாலும் குறிப்பினாலே மக்கள் உணரும்படி செய்வது, இப்படி எழுதிக்கொண்டேயிருக்கலாம். இந்தப் பல்கலைக் கழகத்துக்கு இணையாக வேறு எந்தப் பல்கலைக்கழகத்தைச் சொல்லுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஜங்காசனம்

—யோகி இ. வைரவநாதர்

இது நாக பாம்பைப் போன்ற ஆசனம் ஆகும்.

**பழகும் முறை:** ஒரு விரிப்பில் நெற்றிமுட்டக் குப்புறப்படுத்து கைகள் இரண்டையும் சரீரத்தின் பக்கமாக நீட்டி, திருப்பியபடி ஒட்ட வைத்துக் கொள்ளவும். இப்போது, சரீரத்தை இறுக்காமல் இலேசாக இளக்கி கால்களையும் நீட்டி ஒன்றோடொன்று கூட்டியவாறும் குதிக்கால்களையும் பெருவிரல் வரைக்கும் சேர்த்தவாறும், முழங்கால்களை விரிப்பில் படிய வைக்கவும் பின்பு, கைகள் இரண்டையும் தூக்கி முன்கொண்டுவந்து உள்ளங்கைகளை இருதோள்களுக்கும் கீழாக விரிப்பில் வைக்கவும். அடுத்தபடியாக, சுவாசத்தை உள்இழுத்து, மெல்லத் தலையைத் தூக்கி நிமிர்த்தி தலையையும் கழுத்தையும் பின்பக்கமாக வளைத்து — கைகளை விரிப்பில் நன்ருக அழுக்கியபடி — முதுகையும் மெல்ல மெல்லப் பின்னுல் வளைத்துப் பார்வையையும் பின்போட்டபடி கூடியளவு கழுத்துக்குக்கீழும், தோள்களுக்கு மத்தியிலும் உள்ள முதுகுத்தண்டை முடிந்தமட்டில் வளைத்து அடிவயிற்றில் நல்ல பாம்பு படம் எடுப்பதுபோல் நிற்கவும்.

**கவனிக்க வேண்டியவை:** சுவாசத்தை தலைநிமிர ஆரம்பத்திலிருந்து பின்னுல் வளைந்து நிமிர்ந்து நிற்கும் வரைக்கும் உள்இழுத்தும் புஜங்காசனத்தில் இருக்கும்போது, விட்டு வாங்கவும். புஜங்காசனத்தை இரண்டு மூன்று விஞடிகள் நிறுத்திய பிறகு சுவாசத்தை மெதுவாக வெளியில்விட்டுக் கொண்டு, மெள்ளக் கீழே இறங்கி முன்போல் முகத்தை விரிப்புடன் வைத்து ஆறிக்கொள்ளவும். முதன் முதல் பயிலுகின்றவர்கள் மூன்று முறைசெய்து, பழகி பின்பு ஆறுமுறை செய்யலாம். இதில் கவனிக்கவேண்டியது என்னவென்ருல் பழகினுற்போல் புஜங்காசனத்தில் முடிந்தமட்டில் இரண்டு மூன்று விஞடிகளிலிருந்து ஐந்தாறு விஞடிகள் வரைக்கும் நிறுத்தி நிற்கவும். பின்னுல் வளையும்போது இடுப்பையும், தொடையையும் கீழே அழுத்தி மேற்பக்கத்தைச் சிறிது சிறிதாக வளைக்கவும். கைகள் சரீரத்துடன் சேர்ந்தவாறு இருக்கவேண்டும்.

**பலன்கள்:** முதுகெலும்பு சதைகள் இளக்கப்பட்டு ஆரோக்கியம் அடைகின்றன. கூன்விழமாட்டாது. இவ்விடங்களில் இரத்தோட்டம் அதிகரிக்கும். நரம்புகள் வீரியமடைகின்றன. அடிவயிற்று ஊளைச்சதை முதுகின் மேற்பாகத்து ஊளைச்சதைகள் கரைக்கப்படுகின்றன. அட்றினல் சுரப்பிகள், பால் சுரப்பிகள் அதிருஷ்டமாக ஆரோக்கியப்படுகின்றன. ''பிட்யூடிரி'' க்கு அடுத்தபடியாக அட்றினல் சுரப்பிகளே முக்கியமானவை. இவை கெட்டுவிட்டால், ஆண்மையும் வீரியமும் குறையும். அட்றனலன் என்னும் ஒமோன்களைச் சுரந்து உடல் சீராக இயங்க உதவுகிறது. இவை சீராக இயங்காவிட்டால் சாவும் கிட்டும். இந்த ஆசனம் பெண்களுக்கு ஓர் உகந்த ஆசனம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வாசனம் புறங்கைல் ஆஸ்துமாவுக்கு மிகவும் பயன்மிக்கதாகவும் உதவுகின்றது—அட்றனலன் சுரப்பதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ மனிதர்

— சிவக்கிழார்—திருநாவுக்கரசனுர் —

பாரத புண்ணியபூமியில் உலகம் உய்ய அவதரித்த மஹான்கள் எண்ணிலர். தர்மம் மெலிந்து அதர்மம் வலிமை பெறும் போது இறைவர் தன்னடியார்களில் தக்காரை பூமியில் அவதரிக்கச் செய்கின்ருன் அல்லது அவனே தோன்றுகின்ருன். செந்தமிழ் நாட்டிலே தோன்றிய அடியார்கள் எண்ணிறந்தவர்கள். சைவத்திலும், வைணவத்திலும் தோன்றிய அடியார்களில் சரித்திரம்—வரலாறுகளில் வந்தவர்கள் தவிர எத்தனேயோ மஹாத்மாக்கள் மக்கள் அறியாமலேயே தவத்தால் மக்கள் உய்ய நற்பணி செய்து மறைந்துள்ளனர்.

இந்த இருபதாம் நூற்ருண்டிலும் பல மகான்கள் தோன்றியுள்ளார்கள். சத்யஸாயிபாபா, சிவானந்தர், சின்மயானந்தர், முத்தானந்த, சிவானந்தபரமஹம்ஸர், நித்யானந்தர், அரவிந்தர், ரமணர் முதலிய பலர் தோன்றி இறைமகிமையை விளக்கியுள்ளனர். அதற்கு அவதாரபுருஷர்களில் ஒருவராக, தென்னுடு செய்த தவப்பயனுய் வேலூரையடுத்த காங்கேய நல்லூரில் 1905ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் 25 திகதி பிறந்தார் (இந்தியன் ஸ்டான்டர்டுடைம்) 4 மணி 37 நிமிஷம் ஆன போது திருவார்திரு. மல்லேயாதாஸ்பாகவதர் அவர்களுக்கும் திருமதி கனகவல்லித்தாயார் அவர்களுக்கும் ஒரு முருகன்டியார் திரு அவதாரம் செய்தார். அவர்களே தமிழ்நாடு வடநாடு மலேசியா, ஈழம் முதலிய பகுதிகளிலும் (லண்டன் பாரீஸ் உட்பட) பல இடங்களிலும் சுமார் 60 ஆண்டுகளாக இறை பணியாற்றி, மக்கள் மாண்புறச் சொற்பெருக்குத் தொண்டும், திருக்கோயில்களின் திருப்பணித் தொண்டும் இடையருது ஆற்றிவரும் 64வது நாயனுர் என்று பார் புகழ வாழ்த்த வாழும் திருமுருக கிருபானந்தவாரியார் ஸ்வாமிகள் ஆவார்கள்.

சூரியன் உதிக்காத நாள்கள் கிடையாது. அதுபோன்றே திருமுருக கிருபானந்தவாரி ஸ்வாமிகள், சொற்பொழிவு நிகழாத நாள்கள் கிடையாது என்று சொல்லவேண்டும். சூரியன் ஒரு நாளைக்கு ஒரு முறைதான் உதிக்கும். வாரியார் ஸ்வாமிகள் சொற்பொழிவு ஒரு நாளில் 4, 5, இடங்களில்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவதுண்டு. 76-வயதைத்தாண்டிய பின்னரும் சரீரத்தளர்ச்சிதவிர, மனத்தளர்ச்சியோ, உரைத்தளர்ச்சியோ குரல் தளர்ச்சியோ இன்றி சிங்கக் குரலில் உரை நிகழ்த்தும் புதுமை கண்டு பலர் முருகன் அருளே இம் முனிவர்க்கு இல்லாவிட்டால் இந்த வயதில் இப்படி அயர்ச்சியில்லாது தொடர்ச்சியாய்ச் சொற்பொழிவாற்ற இயலாது என இறும்பூதெய்திக் கூறுவர்.

இக் கட்டுரை ஆசிரியனாகிய அடியேன் சுமார் 50 ஆண்டுகளாக அவர்களின் அபிமானத் தம்பியாக மிக மிக நெருங்கிப்பழகி வரும் பேறு பெற்றவன், பல நாட்கள் அவர்கள் வீட்டில் அவர்களோடு வாழ்ந்திருக்கும் பாக்கியம் பெற்றவன். ஆண்டுதோறும் ஆங்காங்கே அவர்களுடன் பல நாட்கள் செல்லுமிடங்களும் சென்று, தங்கிப் பழகி வருபவன் என்ற முறையிலும், அவர்களின் பேரன்பையும் பேராதரவையும் பெரிதும் பெற்றவன்; என்ற முறையாலும் அவர்களின் மாண்புமிகு செயல்களையும், பண்புகளையும், கருணைமிகு காரியங்களையும்; அருள் சார்ந்த நற் செயல்களையும் நேரில் கண்டு அநுபவித்து மகிழ்ந்தவன் என்றமுறையிலும், அவர்களைப் பற்றி எழுத விடயங்கள் ஏராளமாயுள்ளன. அவையாவும் மலரின் ஒரு கட்டுரையால் நிறைக்க ஏலுமோ இயலுமோ. சுமார் 1000 பக்கங்களாவது குறைந்த அளவு தேவை. அத்துணை பெருமைகள், அருமைகள்.

விலங்கு மனிதன், மனித மனிதன், தெய்வ மனிதன் என மனித இனத்தை மூன்றுவிதமாக பண்புகளின் அடிப்படையில் பிரிக்கலாம். அன்பு சிறிதுமின்றி சுயநலமே நோக்கமாக பிறரைத் துன்புறுத்தித் தாம் இன்புறுபவர் 'விலங்கு மனிதர்'. இரக்கம் கொண்டவராய் தாமும் வாழ மற்றவர்களும் வாழத் துணைபுரிபவர் 'மனித மனிதர்'. விளக்கின் திரியும் எண்ணெயும் தன்னை அழித்துக்கொண்டு சுற்றியுள்ளார்க்கு ஒளி தருவதுபோலத் தாம் துன்பங்களை ஏற்றுக் கொண்டு அருள்சார்ந்த நெஞ்சத்துடன் பிறர் வாழ - ஏனைய உயிர் வாழத்தக்கதாங்கு ஓய்விலாது பணியாற்றுபவர்கள் 'தெய்வ மனிதர்கள்'. இந்தத் தெய்வ மனிதர்களே முன்னர் ஆரம்பத்தில் கூறிய அவதார புருஷர்கள் ஆவார்கள். இவர்களே உலகுய்யத்தோன்றிய உத்தமர்கள்.

இந்த உத்தம புருஷர்களில் ஒருவர் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய எனது அண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருககிருபானந்தவாரியாரவர்கள். செந்தமிழ் நாட்டிலே சொற்பொழிவாளர்கள் பலப்பலர் வாழ்ந்தனர். வாழ்கின்றனர். நான் இத்துறையில் 60 ஆண்டுகள் நுழைந்து, புகுந்து வாழ்ந்தவன். சொல்லும், செயலும் ஒன்றுகச் சொற்பெருக் காற்றிய சொற்பொழிவாளர்களாக இவர்கள் ஒருவரைத்தவிர யாரையும் கண்டதில்லை. வள்ளலார் சொன்னபடி 'சத்தியம் சொல்கின்றேன்' என்றபடி சத்யமாய் யாண்டுகண்டதில்லை.

மனிதர்களில் பலர் புலவராய் வாழ்கின்றனர். பலர் புரவலராய் வாழ்கின்றனர். ஆனால் புலவராயும், புரவலராயும் ஒருவரே வாழ்பவர் இவர் என்பர். அதனைப் பொய்யாக்கிய பெரியார் மதிப்புக்குரிய கிருபானந்தவாரி அண்ணு அவர்கள். புலவராய் வாழ்கின்றபோதும் பல புலவர்கள் பரிசிலை விரும்பி ஊரே சென்று புரவலர்களை இன் சொற்களாலும் கவிகளாலும் மகிழ்வித்துப் பொன்னும் பொருளும் பெற்று வாழ்வதுதான் நாடு கண்டது. இவர்கள் அதற்கு விதிவிலக்கு. மானிடத்தைப் பாடி மகிழ்வித்ததில்லை. மகேஸ்வரனைப் பற்றிப் பேசித் தாமும் மகிழ்ந்து மற்றைய மக்களையும் மகிழ்வித்து நல்லறங்களையும், நல்லொழுக்கத்தையும் மக்கள் உயிரென ஓம்ப வேண்டுமென இடித்துரைத்து சாஸ்திர தோத்திர கருத்துக்கள் பசுமரத்தாணியென மக்கள் மனதில் பதியும்படி செய்து அவர்களின் உயிர் மேம்பாட்டிற்கு வழிகாட்டி உய்விக்கும் உத்தமத் தொழிலே செய்தவர்கள் இவர்கள். அதில் அவர்கள் ஈட்டிய பொருள்கள் இலட்சக்கணக்கில் போவன. அப்படி ஈட்டிய பொருளையும் அறவழியிலேயே செலவிட்டனர் இந்த அறநெறிச் செல்வர்.

தாம் சொற்பொழிவாற்றிச் சம்பாதித்த லட்சக்கணக்கான பொருளையும் அறவழியால் செலவிட்டதோடு அமையாது திருப்பணிகளுக்கென பற்பல திருக்கோயில்களுக்கு ஈட்டிச் செலவிட்ட பொருள் அளவு ரூபாய் நான்கு கோடிக்கு மேலேயே செல்லும். இவர்களுக்கு முன்னும் இத்தகு புலமை வித்தகர் ஒருவர் தோன்றியதில்லை. இது சரித்திரம் சொல்லும் இனியும் ஒருவர் தோன்றப்போவதும் இல்லை. மவுண்ட் எவரெஸ்ட் என்ற சிகரம் ஒன்றுதான் உலகில் உளது. காந்தி ஒருவர்தான் தோன்றினுர். சத்தியம் ஒன்றுய்த்தான் இருக்குமே யொழிய இரண்டாய் இருப்பதில்லை. அதுபோல் கிருபானந்த வாரி யென்ற இந்த அருளாளர் போல சொற்பொழிவுத்துறையில் புலவராயும், புரவலராயும், புரவலரை நாடாப்புலவராயும் வாழ்கின்றுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைப் புலவர்கள் ஏழ்மையில் வாழும் இசைவாணர்கள், மேல் படிப்புப் படிக்க விரும்பும் வறுமை வாழ்க்கை நடத்தும் ஆசிரியர்கள், இவர்களுக்கெல்லாம் மாதா மாதம் 50 ரூபாய் 100 ரூபாய் என வழங்கி வரும் வள்ளல் அவர்கள். எத்தனை யோ ஏழை மாணவர்களுக்கு பொருள் உதவி செய்து படிக்க வைத்து, பலரிடம் நாடி அவர்களுக்கு உத்தியோகங்களையும் வாங்கிக் கொடுத்துள்ள பேரிரக்கம் கொண்ட பெரியவர் இவர்கள்.

ஏழைப் பெண்கள் பலருக்குத் திருமண உதவி செய்துள்ளார்கள். இவர்களால் டாக்டருக்குப் படிக்க வைக்கப்பெற்ற ஒரு நன்றிமறவாப் பெண் இவர்கள் பெயர்களால் ஆஸ்பத்திரியும் கட்டி பெருஞ் செல்வத்துடன் செழிப்புடன் வாழ்ந்து வருகிறர். ஒரு அம்மை இன்றும் இவர்களை அம்மா என்று அன்புடன் அழைத்து வணங்கி உபசரிப்பர். இப்படி என்ஜினியரானவர் உண்டு. ஆசிரியர்கள் பலர். இவர்கள் உதவியால் மேநிலை பெற்றுள்ளனர். தமிழ்நாடெங்கும் எத்துணையோ பெயர் உதவி பெற்று உயர்ந்தவர்கள் உளர்.

தம் பந்துக்களிலேயே நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களுக்கு உதவியுள்ளார்கள். சகோதர, சகோதரிகளுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் கல்வி திருமணம் முதலிய உதவிகள் செய்ததோடமையாது அவர்களின் குழந்தைகளுக்கும் உதவி வருகின்றுர்கள், கற்பக விருக்ஷம் போன்று வாழ்ந்து வருகின்றுர்கள்.

ஒரு இசைவாணருக்குக் குடியிருக்க வீடே கட்டிக் கொடுத்தார்கள். அவர் பின்பு நன்றிமறந்தவராய் வாழ்ந்து இறந்தார். தான் பிறந்த ஊருக்குத்தான் எத்தனை நற்பெரும் பணிகள் செய்துள்ளார்கள். அரசுப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டி உதவினுர்கள். விளையாட்டுத் திடல் வாங்கிக் கொடுத்தார்கள். மற்றுமொரு பள்ளிக்கூடம் சொந்தத்தில் நடத்துகிறுர்கள், சிறுவயதில் தான் வணங்கிய காங்கேய நல்லூர் முருகப் பெருமானுக்கு பல லட்ச ரூபாய்களில் திருப்பணி, திருவாபரணங்கள் செய்ததோடு அமையாது கும்பாபிஷேகமும் செய்துவைத்தார்கள். ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டுமகிழ்ந்து முருகன் அருள்பெறும் 'லக்ஷதீப விழா' நடத்த நிரந்தர நிதி உதவியும் செய்துள்ளார்கள். ஆலயத்தில் 3 காலப்பூஜைக்கு உதவும்படி நிலங்கள் வாங்கி வழங்கியுள்ளார்கள். ஆண்டுதோறும் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஷதீபவிழா கண்கொள்ளாக் காட்சி. நாதஸ்வர வித்வான்கள், இசைவாணர்கள், சொற்பொழிவாளர்கள் யாவரும் வந்து பணி செய்து பரிசும் பெற்றுச் செல்வார்கள். ஸ்வாமி எழுந்திருத்தும் விமரிசையுடன் நடைபெறும்.

முருகன் கோவில் தவிர ஆங்குள்ள பெருமாள் கோவில், சிவன் கோவில், விநாயகர் கோவில் யாவுமே இவர்களின் திருப்பணி பெற்றுச் சிறப்புடன் திகழ்கின்றன. இதில் ஒரு பெருஞ்சிறப்பு தான் பிறந்த ஊருக்குச் செய்த இந்தத் திருப்பணிகள் அனைத்திற்கும் செலவு செய்த பல லட்சக் கணக்கில் உள்ள பொருள்கள் யாவும் இவர்கள் சொற்பொழிவு செய்து ஈட்டிய பொருளேயொழிய திருப்பணி வசூலென ஏதும் ஒரு காசும் பெற்றதில்லை. தன் ஊருக்கென வசூல் செய்யக்கூடாது என்பது அவர்கள் விரதம்.

இவர்கள் குருவெனக் கொண்ட திருப்புகழ் சாமி அய்யரவர்கள் குடும்பத்திற்கு அவர்கள் காலமானபிற்கு மாதந்தோறும் அந்தக் காலத்தில் 75 ரூபா (ஒரு குடும்பச் செலவுக்கு அந்தக் காலம் போதுமானது) வீதம் கால் நூற்றுண்டுக்கும் மேலாக-25 ஆண்டுகளுக்கும் மேலாகக் கொடுத்து உதவினுர்கள். அதுமட்டுமல்ல அவர்கள் மகள் திருமணம் நடத்திவைத்தார்கள் தன் கைச்செலவில் குருநாதராகக் கொண்டவர் மகனைப் படிக்க வைத்து ஒரு பாங்கில் வேலையும் வாங்கிக் கொடுத்து அவன் தக்காங்கு ஊதியம் பெற்ற பின்பே மாதந்தோறும் கொடுத்து வந்த ஊதியத்தை நிறுத்திஞர்கள். குருநாதர் மருமகனுக்கு மதுரையில் உத்தியோகம் வாங்கிக் கொடுத்து வேண்டும் உதவிகளும் செய்து அவர் மரண காலம் வரை உதவிசெய்தார்கள். இத்தனைக்கு அந்தக் குருநாதரிடம் ஒரு திருப்புகழ்கூட இவர்கள் கற்றதும் இல்லை. ஒரு உபதேசம் பெற்றதும் இல்லை. இவர்கள் தந்தையாரால் குருவெனப் போற்றப் பெற்றவர்கள் திரு. சாமிநாதய்யரவர்கள். அவ்வளவிற்கே இவ்வளவு பேருதவிகள்.

தனக்கு சிவதீக்ஷையாகிய நிர்வாண தீக்ஷை செய்வித்த குருநாதர் சிவஸ்ரீ ஈசானசிவாச்சாரிய ஸ்வாமிகளுக்கு சிலகாலம் மாதா மாதம் பொருள் அனுப்பிஞர்கள் பல தடவை பெரும் பொருட்குவையும் கொடுத்துள்ளார்கள்.

மோஹனூர் முருகன் கோயில் முன்புள்ள சத்திரம் 40 வருஷங்களுக்கு முன்னுல் இவர்கள் கட்டியது. வடலூர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணி கும்பாபிஷேகம் 1948ல் ஏறக்குறைய 4½ கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்டது. அடியேனும் அத்திருப்பணி யின்போது உடன் இருந்து தொண்டு செய்தவன். வயலூ ருக்கு இரண்டு முறை கும்பாபிஷேகத் திருப்பணி விழா நடத்தியுள்ளனர். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், திருவானைக்காக்கோயில், காஞ்சிக்கோயில், சமயபுரம்கோயில், வள்ளிமலைத் திருப்பணி, அவிநாசித் திருப்பணி, சென்னை குயம்பேட்டைத் திருப்பணி, காங்கேய நல்லூர் கோயில் பணி கள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ கோயில் திருப்பணி கள் இவர்கள் முன்னின்று உடனிருந்து உழைத்து நடத்திய திருப்பணிகள். இவைகள் தவிர இவர்கள் சார்ந்தருளது உத விய கோயில் திருப்பணிகள் பலப் பல உள.

ஆலயத்திருப்பணி மட்டுமா? கலைமகளுக்குரிய ஆல யங்களாகிய பள்ளிகள் பலவற்றுக்கு நிதி உதவி கட்டிடம் கட்டியுதவியுள்ளார்கள். வாலாஜபாத் இந்து மதப்பாடசா லைக்கு சுமார் 30 வருஷங்களுக்கு முன்பே தன் பெயரால் ஒரு கட்டிடம் கட்டிக்கொடுத்துள்ளார்கள். திருப்பராய் துறை இராமகிருஷ்ணக் குடில் என்ற அநாதைப்பிள்ளைகள் பள் ளிக்கு நிரந்தர நிதியுதவிக்காக சுமார் 27 லட்ச ரூபாய்கள் தமிழ்நாடெங்கும் புயலெனச் சுற்றி வசூல் செய்தது. முன்பி ருந்த நிதியுடன் சேர்த்து, நிதிநிரந்தர நிதியாக ஒருகோடி இருக்குமாறு உதவி செய்தார்கள்.

இப்படிக் கருணையே வடிவாய் வாழ்ந்து வருகின்ற இந்த உத்தமோத்தம பெரியார் இளமையில் முருகனை வழிபட்ட தொடமையாது அதன் தொடர்ச்சி வயலூர் வள்ளற் பெரு மான் திருவுருவை வயலூர் முதல் கும்பாபிஷேகத் திருப் பணியின்போதே அமைத்து அன்றுதொடங்கியபூஜை50ஆண் டுகளாக ஒரு நாள் கூட நிறுத்தாது காலையில் எழுந்ததும் வயலூர் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து பின்பே தண்ணீர் கூட அருந்துவது என்று வாழ்கின்றனர். இன்றுவரை ஒரு காய்ச்சல் தலைவலி யென்று கூட அவர் கள் கண்டதுமில்லை. அது காரணமாகப் பூஜை நின்றதும் இல்லை. இமயமலையின் 14000 அடி உயரத்திலும் குளிர்ஸ்நா னம் செய்து பூஜை நடைபெற்றது. 'அமர் நாத்' யாத்தி ரையிலும் அவர்கள் எதை மறந்தாலும் முருகனை மறவா உள்ளமுடையவர்கள். அவர்கள் பூசனைமறவாப்புனிதர் ஆகை யால் அவர்களின் பூஜைப்பெட்டி அவர்களுடன் ரயிலில் செல்லும், காரில் செல்லும், வண்டியில் செல்லும், விமானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் செல்லும். எங்கும் உடன் செல்லும் எத்தனையோ தடவை கள் முன்பெல்லாம் ரயில் பிரயாணத்தின் போது காலையிலும் பிரயாணம் தொடர்ந்தால் செல்லும். ரயிலின் முதல் வகுப்பு வண்டியிலேயே பூஜையும் முதல்தரமாய் நடைபெறும். சிறிது நேரம் வண்டி நிற்கும். ரயில் நிலையங்களில் ஸ்நானம் செய்து ஜலமும் எடுத்துக்கொண்டு ரயிலில் முதல் வகுப்பில் அமர்ந்து பூஜை முடிப்பார்கள்.

மாதந்தோறும் சஷ்டி விரதம், கார்த்திகை விரதம் உண் மையான உபவாச விரதம்தான். ஐப்பசி மாதச் சஷ்டிவிழா ஆறு நாட்களும் இறைவனுக்கு அபிஷேகம் செய்த இளநீரே யன்றி எவ்வுணவும் கொள்ளாது நிரந்தர பட்டினிதான். இந்த விரத நாட்களிலும் ஒரு நாளைக்கு ஒன்ருே, இரண்டோ சமயங்களில் மூன்ருே சொற்பொழிவுகளும் நடைபெறும். வழக்கம் போல தபால்கள் 30, 50 என எழுதுவதும் கட்டுரை கள் எழுதுவதும் சந்தேகம் தெளிய வந்துள்ள அன்பர்களு டன் உரையாடுதலும் சந்தியாவந்தனங்களும் சிறிதும் சோர் வின்றி அவர்கள் நடாத்தும் பாங்கைக் காண்பர். முருகனே இவர்களுக்கு முன்னின்று இவ்வலிமையைக் கொடுத்துள்ள தாக உணர்வர். இந்த உபவாச நாட்களிலும் ஏற்றுக்கொண் டுள்ள திருப்பணிகளுக்குப் பண வசூல் செய்ய அன்பர்கள் அழைத்தால் அவர்களுடன் பகல் முழுதும் வெயிலென்றும் மழையென்றும் பாராது சுற்றிச் சுழன்று வசூல் செய்யவும் ஓடுவார்கள்.

தந்தையார் அவர்கள் 1951ம் ஆண்டுவரை வாழ்ந்தார் கள். அவர்கள் உள்ளவரை அவர்களையும் தாயார் அவர்களை யும் வணங்கித்தான் வெளியூர் செல்வார்கள். வெளியூர் சென்று திரும்பியதும் இரு முது குரவர்கள்தாள் பணிந்து தான் இல்லுள் நுழைவார்கள். தந்தையார் அவர்கள் காலத்துக் குப்பின் தாயாரவர்கள் 27-10-77 வரை வாழ்ந்தார்கள். அவர் கள் முருகனடியை அடையும்போது அவர்களுக்கு வயது 99. அந்நாள்வரை அவர்கள் ஆரோக்கியமாய் வாழ்ந்து உணர்வு சிறிதும் குன்ருது திருமுருகன் திருவடியை அடைந்தார்கள். அதுவரை தனது அருமைத் தாயார் திருவடியை வீட்டிலி ருந்து புறப்படும் போதும் வீடு திரும்பும் போதும் வணங்கு தலை மறவாதே செய்வார்கள். அம்மாவும் அன்புடன் நோயில் லாது இரு என்று ஆசீர்வாதம் செய்வார்கள். அந்தத் தவச் செல்வியாகிய தாயாரின் வரத்தால் இன்றுவரை நோயின்றி வாழ்கிருர்கள் இவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகப் படிப்புப் பெற்றவர்களும், ஆசிரியர்களும், டாக்டர்களும், ஆராய்ச்சி செய்வோரும் அமர்ந்து விரும்பி சுமார் 3 மணி நேரம் (அந்தக் காலத்தில் 4 மணி நேரம் கூட உரையாற்றுவதுண்டு. சிவராத்திரி விழாவொன்றில் 'சந்திரஹாசன்' என்ற கதையை 9 மணி நேரம் உரையாய்த் தொடர்ந்து நிறுத்தாமல் நடாத்தியதை யான் கண்டுள்ளேன்) அயராது அமர்ந்து நவரசங்களுடன் பருகச் செய்யும் இப் பெருந்தகை பள்ளியில் படிக்காத மேதையாவார். திண்ணைப்பள்ளியில் உள்ளிலும் நுழைந்தவரல்லர்.

தந்தையாராகிய திருமலையாதாஸ் பாகவதர் அவர்களே 5 மணி நேரம் அல்லது விடியவிடிய மைக் முதலிய ஒலி பெருக்கி இல்லாத காலத்திலேயே ஒரு மைல் தூரம் கேட்கும்படி 5 கட்டை சுருதியில் இசையுடன் பாடி நகைச் சுவையுடன் கதாகாலக்ஷேபம் செய்யும் திறன் படைத்தவர்கள். அவர்களுடைய புதல்வர்களிலேயே ஒருவர் மிருதங்கம் வாசிப்பார். ஒருவர் வயலின் வாசிப்பார். இவர்கள் பின்பாட்டுப் பாடுவார்கள். அப்படி குடும்பமே கலைக் குடும்பம். ஆகவே தந்தையாரிடம் இவர்கள் இளமையில் கற்ற கல்வியே இன்று இவர்களின் ஒப்பும், உவமையும் அற்ற சொற்பொழிவுத் திறனுக்கு ஊற்றுக்கண்.

இளமையிலேயே ஆயிரக்கணக்கான பாடல்களை இராமாயணம், பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் முதலியவற்றிலிருந்து மனப்பாடம் செய்துள்ளார்கள். திருப்புகழில் அனேகமாய் எல்லாப் பாடல்களுமே மனப்பாடம். இவர்கள் உரையாற்றுந்திறன் யாருக்கும் வாய்த்ததில்லை. நவரசங்களும் ததும்ப நடிப்புக்கலைத் திகழ இவர்கள் சொற்பொழிவாற்றும் போது நேரம், காலம் நினைவின்றி மக்கள் அசையாதிருந்து கேட்பார்கள். 17 வயதிலேயே தென்மணம் வரதாச்சாரி ஸ்வாமிகளிடம் வீணை கற்றவர்கள். இசையிலும் திறன் மிகுந்த இசைப்பேராசிரியர் எனவே இசையுடன் கதாகாலக்ஷேபம் செய்யும் போது சங்கீத வித்துவான்களே போற்றும் வண்ணம் செய்வார்கள்.

ஒரு தடவை என் நண்பர் நாதஸ்வர வித்துவான் காருகுறிச்சி அருணசலம் என்பவர் 'கூறினர்' "அண்ண சிவாஜி கணேசன் தம்பி திருமண விழாவில் கிருபானந்தவாரி ஸ்வாமி கதாகாலக்ஷேபம் செய்தார்கள். சிவாஜி என்னுடன் அமர்ந்து கேட்டார். அதுதான் அவர் முதல் தடவையாக இருந்து கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னார் நானெல்லாம் பவுடர் போட்டு மேக்கப் செய்து நடிக்கிறேன். திறனுடன் என்னைப்போலவே பலரும் சினிமாவில் நடிக்கின்றனர். அதை நீண்ட நேரம் பொறுமையுடன் பார்க்க மக்கள் விரும்பாமல் நீளமானபடம் போரடிக்கிறது என்கின்றார்கள். ஆனால் ஸ்வாமி 3½ மணிநேரமாக எந்தமேக்கப்பும் செய்யாமல் நம்மையெல்லாம் அசையாது மெய்மறக்கச் செய்து நேரத்தை மறக்கச் செய்துவிட்டார்கள். நாமெல்லாம் பலர் சேர்ந்து 2 மணி நேரம் மக்களைப் பொறுமையாய் வைக்க இயலவில்லை. அவர்கள் ஒருவரே பல பாத்திரங்களாக சீதையாக, ராமனாக, ராவணனாக, அனுமானாக நடித்து நம்மை நேரம் தெரியாது மகிழ்ச்சியால் திளைக்கச் செய்கிறார்கள். இது ஒரு பெரிய ஆச்சரியம் அல்லவா என்று சிவாஜி வியந்தார் என்றார்.

அது நூற்றுக்கு நூறு உண்மையான செய்தி. அவர்கள் தொடர் சொற்பொழிவாற்றிய பல ஊர்களில் சினிமாக் கொட்டகை நடத்துபவர்கள் ஐயோ! இந்தக் கிருபானந்தவாரி பேச்சு என்றைக்கு ஓயும். கொட்டகை வசூலே குறைந்து போச்சே என்று குறைபடுவார்கள்.

இலங்கை நண்பர் ஒருவர் கூட இதுபற்றி என்னிடம் சொன்னார்கள். யாழ்ப்பாணத்தில் ஓரிடத்தில் இவர்கள் சொற்பொழிவாற்றும் போது அங்குள்ள சினிமாத் தியேட்டர் வசூல் முற்றிலும் குறைந்து கஷ்டப்பட்டார்கள் என்று.

எத்தனை தடவை அவர்கள் பேச்சைக் கேட்டாலும் திகட்டாது. ஒரே கதையை நானே எத்தனையோ தடவை கேட்டுள்ளேன். திரும்பத் திரும்பக் கேட்டாலும் சலிக்காமல் கேட்டுக்கொண்டிருக்கவே தோன்றும். அத்தனை சுவைபட நகைச்சுவையுடன் சொல்வார்கள். ஒவ்வொரு தடவையும் அதில் ஏதாவது சில புதிய கருத்துக்கள் கிடைக்கும். வாரியார் அண்ணா அவர்களே கூறுவார்கள்; அடியேனிடம் சிவக்கிழார்! மதுவருந்துபவன், திரும்பத் திரும்ப மதுக்கடையை நாடுவதுபோல நமது சொற்பொழிவுக்கு மக்கள் திரும்பத் திரும்ப வருமாறு சுவைப்படச் சொற்பொழிவாற்ற வேண்டுமென்பார்கள்.

இவர்களின் சொற்பொழிவுகளில் அமர்ந்து கேட்டுச் சொற்பொழிவாளர்களாகத் தமிழ் நாட்டில் திகழ்பவர்கள் பலர். இவர்களின் சொற்பொழிவின் கருத்துக்களையும் சொற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிவுப் பாணியையும் பின்பற்றிச் சொற்பொழிவு பலர் செய்கின்றனர். இவர்கள் கருத்தைத எடுத்துக் கையாளாத சொற்பொழிவாளர்களே இலர் எனலாம். சமயச் சொற்பொழி வாளர்களில் அறவே இலர்.

சித்தாந்த சாஸ்திரக் கருத்துக்களை இவர்கள் எளிமை யான உவமானங்களுடன் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும்படி கூறும் திறன் இவர்களுக்கே உரியது. சுமார் 90 வருடங்களுக்கு மேலாக நடந்து வரும் தூத்துக்குடி சைவ சித்தாந்த மகாநாட்டில் அந்தக்காலமுதல் ஆண்டு தோறும் ஒருவரைத் தலைவராக அழைப்பார்கள். ஆனல் அடுத்தாண்டு மற்றொருவரைத்தான் அழைப்பார்கள். ஒரு தடவை தலைவரா னவர் திரும்பத் தலைவராக வருதல் இல்லை. ஆனல் இவர்கள் தலைவராக ஓராண்டு தலைமை வகித்தபின் பல ஆண்டுகளாக ஆண்டு தோறும் இவர்களே மாநாட்டுத் தலைவராக வரவேண் டுமென வற்புறுத்திக் காத்திருந்து வருந்தி அழைப்பார்கள்.

கோவில்பட்டியில் விசாகவிழா ஆண்டுதோறும் நடை பெறுகிறது. சுமார் 45 வருடங்களாக இவர்களே அந்த விழா சொற்பொழிவாளர். இப்படி எத்தனையோ ஊர்களில் ஆண்டு தோறும் பல நாட்கள் வழக்கமாக நடக்கும் விழாக்களுக்கு இவர்களே வழக்கமாகச் செல்லுமாறு அழைப்புகள் வருந்தி அழைத்துவரும், சிவகாசி, விருதுநகர், மதுரை, கோவை, ஈரோடு கோபிச்செட்டிப்பாளையம், திருச்சி சங்கரன் கோவில் இப்படிப் பல ஊர்களில் நிரந்தர விழாத்தலைவராக இவர்களே இருப்பர் காரணம் அவர்களின் சொற்பொழிவுத்திறனே.

அவர்கள் சொற்பொழிவாற்றும்போது கலைமகள் அவர் கள் நாவில் களிநடம் புரிவாள். நேருவுக்குப்பின் யார் என்ற படி இவர்களுக்குப்பின் அந்த இடத்தை ஈடுசெய்ய யாரும் இல்லை. எவரும் அந்தச் சிகரத்தை எட்டவும் முடியாது. இதற் கெனவே பிறந்தவர்கள் இவர்கள். சொற்பொழிவை ஒரு திறன் மிகுந்த கலையாக அவர் ஆக்கி அதனைத் தன் உணர்வுடனும் உரையுடன் ஒன்ற வைத்துவிட்டார்கள். எக்குறிப்பும் இன்றி நற்குறிப்பெலாம் திகழும் பல மணிநேரம் சொற்பொழிவாற் றுவார்கள். சொற்பொழிவு செய்யும் போது கதையில் வரும் அந்தப் பாத்திரங்களாகவே மாறிவிடுவார்கள். சோகமான கட்டங்கள் வரும்போது அந்தப் பாத்திரமாகவே மாறிவிடு வார்கள். அவர்கள் கண்ணிலிருந்து நீர் பெருகும். கேட்பவர்க ளும் கண்ணீர் வார உருகுவார்கள். நகைச்சுவையில் சபையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலுங்கும்படி சிரிக்கச் செய்து அவர்களும் குலுங்கச் சிரிக்கும் அழகே ஒரு கவர்ச்சியாகும். இவற்றிற்கெல்லாம் காரணம் அவர்களின் முருக பக்தியும் அருள்நெறிச் செயலுமேயாகும். உள்ளத்தே உண்மை ஒளி உண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்றார் பாரதியார். அது நூறு சதவிகிதம் உண்மை என்பதை இங்கே இவர்களிடம் காணலாம்.

முதிர்ந்த வயதிலும் தோற்றப் பொலிவுடன் காந்தியடிகள் விளங்கினார்கள். அதுபோல் இவர்களும் இம்முதிர்ந்த வயதிலும் பக்தியின் முதிர்ச்சியால் தோற்றப் பொலிவுடன் திகழ்கிறார்கள்.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் மகாத்மாக்களில் ஒருவர் இவர்கள்.

இவர்கள் சொற்பொழிவைக் கேட்டுத் திருந்தியவர்கள் பலர். இந்தியாவிலேயே எத்தனையோ மக்கள் இவர்கள் சொற்பொழிவு கேட்டுத் தீமையகன்று நன்மை மிகுந்தவராய் வாழ்கின்றனர்.

மலேசியாவில் இவர்கள் சொற்பொழிவு கேட்டு மது, மாமிசம் விட்டுப் பக்தி வாழ்வு மேற்கொண்டவர்கள் பலர். தினம் இரண்டு மூன்று கோழிகளுக்கு வயிற்றில் இடம் கொடுத்துவாழ்ந்து வந்தவர்கள் பலர் சைவராகித் தீக்ஷை பெற்று வாழ்கின்றனர் இவர்கள் சொற்பொழிவு கேட்டபின்.

அத்தகையவர்களில் ஓரிருவர் ஆண்டு தோறும் ஈங்கு வந்து சில நாட்கள் இவர்கள் சொற்பொழிவு கேட்டு, திருத்தல தரிசனமும் செய்து குருநாதர் தரிசனமும் செய்து செல்வர்.

இவர்கள் தனக்கு யாரையும் சீடன் என ஏற்றதில்லை இதுவரை. ஆனால் இவர்களைக் குருவாகக் கொண்டு வாழ்பவர்கள் பலர். இன்னும் பலர் ஏகலைவன் போன்ற சீடர்களாயும் உளர்.

தன்னுடைய 16ம் வயதின் முடிவில் ஆரம்பித்த சொற்பொழிவுத் தொண்டை இன்று 76 ஆண்டுகள் முடிந்த பின்னரும் 60 ஆண்டுகள் ஒரு பிரவிருத்தி – வளர்பிறை மேலும் மேலும் வளர்வதுபோல் வளர்த்துக் கொண்டவர்கள் யாரும் இதுவரை சரித்திரத்திலேயே கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தச் சமயச் சொற்பொழிவாளரின் பிரசங்கத்துக்கும் டிக்கட் போட்டு (சொற்பொழிவு ஹால் நுழைவுக்கட்டணம்) விற்றுச் சொற்பொழிவு நடந்தது கிடையாது. அதை நினைக்கவும் முடியாது. ஆனால் இவர்கள் சொற்பொழிவுக்கு அந்தக் காலத்திலேயே நுழைவுச் சீட்டுப்பணம் கொடுத்துப் பெற்றுச் சொற்பொழிவு கேட்க மக்கள் விரும்பி வருவார்கள். அப்படி மக்கள் 60 ஆண்டுகளாக அவர்களின் சொற்பொழிவை விரும்பிக் கேட்கிறார்கள்.

நியாயமாக இவர்களின் சொற்பொழிவுக் காலமான 60 ஆண்டு நிறைவை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டும். இறை திருவருள் அன்பர்களுக்கு உணர்த்திக் கொண்டாட வைக்குமென நம்புகிறேன்.

இந்த மாண்புமிகு சொற்பொழிவுச் சக்கரவர்த்தி பக்திச் செல்வர் மக்களை நன்னெறி செலுத்தும் நடமாடும் கோயில் இன்னும் ஓர் நூறாண்டிரும் என்று வைணவத்தில் வாழ்த்திய படி பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து பாரின் மக்களைப் பக்தி நெறி நிறுத்தத்திருவருள் துணைசெய்யட்டும் என வேண்டி இதனை முடிக்கிறேன்.

---

# அருள் வாக்கு

பலாப் பழத்தை நறுக்கக் கத்தி இருந்தால் மட்டும் போதாது. நல்லெண்ணெயும் வேண்டும். அது போல பகைவரை அழிக்க சேனை இருந்தால் மட்டும் போதாது. அச் சேனைகளிடம் அரசனுக்கு அளவற்ற அன்பு இருக்கவேண்டும், கத்தியில் நல்லெண்ணெயைத் தடவிப் பலாப் பழத்தை நறுக்குவது போல சேனைகளிடம் அன்பைக்காட்டி, அச்சேனைகளைக் கொண்டு பகைவரை அழிக்கவேண்டும்.

—வாரியார் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த. (உயர்தரம்) — இந்து நாகரிகம்-2
# விரிவான பாடத் திட்டம்

1. 0 மனித சிந்தனையை இந்து மெய்யியல் வளம்படுத்தியமை.

1. 1 உபநிடத சிந்தனைகள்

1. உபநிடதங்களை பற்றிய ஓர் அறிமுகம்
உபநிடதம் என்பதன் பொருள். பிரதான உபநிடதங்கள் ஈச; கேன; கட; பிரஸ்ன; முண்டகம்; மாண்டுக்கியம்; தைத்திரீயம்; ஐதரேயம்; சாந்தோக்கியம்; பிருகதாரண்யகம்; சுவேதாசுவதரம்; கௌஷீதகீ.
2. உபநிடத சிந்தனைகளும் இந்து மெய்யியலில் அவைபெறும் முக்கியத்துவமும்.
உபநிடதங்கள உலகியல் வாழ்வுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம்.
3. இந்து நாகரிக வளர்ச்சியில் உபநிடதங்களின் பங்கு

1. 2 அவைதிக நெறிகள்

அ. சமணம்

1 சமணம் பற்றிய சுருக்கமான வரலாறு.
2. சமண தத்துவம்; சுருக்கமான விளக்கம்.
3. இந்து சமயம், சமண சமயம், ஒற்றுமை வேற்றுமைகள்.

ஆ. பௌத்தம்

1. பௌத்தம் பற்றிய சுருக்கமான வரலாறு
2. பௌத்த தத்துவம், சுருக்கமான விளக்கம்.
3. இந்து சமயம், பௌத்த சமயம், ஒற்றுமை வேற்றுமைகள்.

1. 3 வேதாந்த மரபு

அ. அத்துவைதம்

1. அத்துவைதம் பற்றிய அறிமுகம்; சிறப்பாகச் சங்கரர் கூறும் விளக்கம்.
2. இந்து நாகரிக வளர்ச்சியில் சங்கரரின் பங்கு.

ஆ. விசிட்டாத்துவைதம்

1. விசிட்டாத்துவைதம் பற்றிய அறிமுகம்; சிறப்பாக இராமானுஜர் கூறும் விளக்கம்.
2. இந்து நாகரிக வளர்ச்சியில் இராமானுஜரின் பங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. துவைதம்

1. துவைதம் பற்றிய அறிமுகம்; சிறப்பாக மாத்துவர் கூறும் விளக்கம்.
2. இந்து நாகரிக வளர்ச்சியில் மாத்துவரின் பங்கு

1. 4 சித்தாந்த மரபு

1. சைவ சித்தாந்தம் பற்றிய அறிமுகம்; முப்பொருள் விளக்கம்; சைவ நாற்பாதங்கள் பற்றிய விளக்கம்; திருவருளின் செயல்: இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகியன பற்றிய விளக்கம்.
2. சிவன்முத்தர் நிலை; சுத்தாத்துவித முத்திநிலை. (சிவஞான போதம், சிவஞானசித்தியார், திருவருட்பயன் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கூறியவற்றிற்கு விளக்கம்)
3. வேதாந்த மரபு, சித்தாந்த மரபு, ஒற்றுமை, வேற்றுமைகள்
4. இந்து நாகரிக வளர்ச்சியில் சைவசித்தாந்தத்தின் பங்கு.

2. 0 இந்துக்களின் சமூக, கல்வி, பொருளாதார, சமய, அரசியல் மரபுகள்

2. 1 வருணாச்சிரம தர்மம்

1. வருணம், ஆச்சிரமம் பற்றிய விளக்கம். சமூக வாழ்வையும், தனியார் வாழ்வையும் இந்து மதம் நெறிப்படுத்திய முறை.
2. தேசிய அபிவிருத்தியில் சமய வாழ்க்கையின் பங்கு.
3. இந்து சமயமும் உலக நோக்கும்.

2. 12 நான்கு புருடார்த்தங்கள்

1. புருடார்த்தங்கள் பற்றிய ஓர் அறிமுகம்
2. புருடார்த்தங்கள் பற்றித் தர்மசாத்திரங்களும் திருக்குறளும் கூறும் கருத்துக்கள்
3. இந்து ஒழுக்கவியலும் புருடார்த்தங்களும்

2. 2 கல்விப் பாரம்பரியங்கள்

1. குருகுலக் கல்வி; உபநிடதங்கள் தரும் விளக்கம்; இதிகாசங்கள் தரும் விளக்கம்.
2. தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் நிலவிய திண்ணைப் பள்ளிகள்
3. கல்விக் கோட்பாடுகள்; கற்றல், கேட்டல், வாழ்க்கையிற் கற்றல், வாழ்நாள் முழுதுங் கற்றல், குருசீட பரம்பரை.
4. இந்து நாகரிக வளர்ச்சியில் கல்விப் பாரம்பரியங்களின் பங்களிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. 3 பொருளாதாரக் கொள்கை

1. இந்துக்கள் பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கொண்ட முறை
2. அர்த்த சாத்திரம் கூறும் பொருளாதார முறை
3. திருக்குறள் கூறும் பொருளாதார முறை
4. இந்து நாகரிக வளர்ச்சியில் இந்துக்களின் பொருளாதாரக் கொள்கையின் பங்களிப்பு.

## 2. 4 மடங்களும் ஆதீனங்களும்

1. மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றின் தோற்றுவாய் — ஓர் அறிமுகம்
2. மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றின் சமயச் சார்புகள்
3. விஜயநகர மன்னர்கள் மடங்களுக்கும் ஆதீனங்களுக்கும் அளித்த முக்கியத்துவம்
4. பணிகள்
5. இந்து நாகரிக வளர்ச்சியில் மடங்கள், ஆதீனங்கன் ஆகியவற்றின் பங்களிப்பு.

## 2. 5 அரசியல் நிறுவனங்கள்

1. இந்து அரசியலின் தோற்றமும் வளர்ச்சியும் — ஓர் அறிமுகம்
2. அமைச்சு, நாடு, பாதுகாப்பு, நிர்வாகம் ஆகியன பற்றி இந்துக்களின் கொள்கைகள்.
   முக்கியமாக அர்த்த சாத்திரம் கூறும் கருத்துக்களையும் திருக்குறள் கூறும் கருத்துக்களையும் ஒப்பிட்டு நோக்கல்.
3. இந்து நாகரிக வளர்ச்சியில் இந்து அரசியல் நிறுவனங்களின் பங்களிப்பு.

## 3. 0 இந்துக்களின் கலை

## 3. 1 இந்துத் திருக்கோயில்

1. இந்துக் கோயில்கள் பற்றிய அறிமுகம்
2. இந்து நாகரிக வளர்ச்சியில் இந்துக்கோயில்களின் பங்களிப்பு

## 3. 2 கோயிற் கலின் கலைகள்

### அ. கட்டடக் கலை

1. இந்துக் கோயில் கட்டட அமைப்பு
2. இந்துக் கோயிற் கட்டடக் கலையின் வளர்ச்சி—சுருக்கம்
3. இந்துக் கட்டடக் கலையின் சிறப்பு அம்சங்கள்
4. இந்து நாகரிக வளர்ச்சியில் கட்டடக் கலையின் பங்களிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சிற்பம்

1. சிற்பக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும், நூல்கள்; சுருக்கம்
2. பிரதான சிற்ப வடிவங்கள் பற்றிய நோக்கு
அ. ஊடகங்கள், மரம், கல், சாந்து, உலோகம், தந்தம்.
ஆ. சிற்ப அமைப்புகள்: கோபுரம், தேர், வாகனங்கள், விமானம்
3. இந்திய கலா தத்துவமும் சிற்பமும்
4. இந்து நாகரிக வளர்ச்சிக்குச் சிற்பக்கலையின் பங்களிப்பு.

இ. ஓவியம்

1. ஓவியக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும்; நூல்கள்; சுருக்கம்
2. இந்துக்களின் பிரதான ஓவியக் கலைக்கூடங்கள் பற்றிய அறிவு
3. இந்திய கலா தத்துவமும் ஓவியமும்
4. இந்து நாகரிக வளர்ச்சிக்கு ஓவியக் கலையின் பங்களிப்பு

ஈ. இசைக்கலை

1. இசைக்கலையின் வரலாற்றுப் பாங்கான வளர்ச்சி
சருநாடக சங்கீதம், தமிழிசை, இந்துஸ்தானி சங்கீதம்
2. இந்திய நாட்டில் வழக்கிலுள்ள இசைக்கருவிகள்—அறிமுகம்
3. சாகித்திய கர்த்தாக்கள்—சங்கீத மும்மூர்த்திகளின் பணிகள்
4. இசைக்கலை வளர்ச்சியில் தமிழிசையின் பங்கு
5. இந்துநாகரிக வளர்ச்சிக்கு இசைக்கலையின் பங்களிப்பு.

உ. நடனக்கலை

1. நடனக் கலையின் தோற்றுவாய்
2. நடனக்கலையின் பிரிவுகள்: பரத நாட்டியம், கதக்களி, மணிப்புரி இவற்றின் சிறப்பியல்புகள்.
3. பரதநாட்டியத்தின் தனிச்சிறப்பு
4. ஆலயங்கள், பொதுமன்றங்கள் ஆகியவற்றில் நடனக்கலை
5. இந்துநாகரிக வளர்ச்சியில் நடனக்கலையின் பங்களிப்பு

3. 3 இந்து விக்கிரக இயல்

1. விக்கிரகக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும் நூல்கள்; அறிமுகம்
2. விக்கிரகங்கள் பற்றிய அமைப்பு இலக்கணம்; சுருக்கமான பொதுவிளக்கம், பிரதான விக்கிரகங்கள் பற்றிய நோக்கு.
3. இந்திய கலா தத்துவமும் மேனாட்டுக் கலைமரபும்.
4. இந்துநாகரிக வளர்ச்சியில் விக்கிரகக் கலையின் பங்களிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா?

— மாத்தளை — அருணேசர் —

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## யாகபலி பாபச் செயலேயாகும்

மாமிசபட்சணியார்: ஐயா! நீர் இதுகாறும் கூறியவை அனைத்தையும் உணர்ந்துகொண்டேன். ஆனால் யாகத்தில் கொல்வது ஒருக்காலும் பாபமாகாது என்பதை உணர்வீர். ஏனெனில், யாகத்தில் கொல்லப்படும் விலங்குகளின் ஆத்மா மந்திர சக்தியினால் மேலான பதவியை அடையும்படி செய்திருக்கிறார்கள்.

சாகபட்சணியார்: அறிவு குறைவாயிருந்த மிகப் பழைய காலத்திய மக்கள் அப்போது கொண்டிருந்த கொள்கையின்படி அவர்களின் செய்கை பாபமாகத் தோற்றவில்லை.

வைத்தியர் நோயாளிகளுக்கு அறுவை வைத்தியம் செய்யும் போது மயக்க மருந்து கொடுத்து சிறிதும் வேதனையில்லாமல் அறுப்பதுபோல, அக்காலத்தவர் மந்திர சக்தியினாலும் மற்றும் பல்வேறு முறைகளினாலும் உயிரினங்களை இமிசையின்றி உயிர் வாங்கினதும் மோட்சம் கிடைக்க வைத்ததும் உண்மையாகவே இருந்திருந்தாலும், அவர்கள் கொன்ற உயிர்களுக்கு மோட்ச பதவி கொடுக்கச் சக்தியுடையோராயிருந்தால் ஏன் தங்களுடைய தாய் தந்தை, பெண்டுபிள்ளை, உற்றார் உறவினரையும் அவ்விதம் யாகத்தின் மூலமாய்க் கொன்று மோட்சத்திற்சனுப்பியிருக்கக்கூடாது?

அப்படி எவரும் செய்ததாகக் காணவில்லையே. சுயநலம் பிடித்த சிலர் மாமிசம் சாப்பிடுவதற்காக இப்படி வீண் சமாதானங்களைக் கூறிக் கொண்டு யாகம் யாகமென்று திரிந்தால் அதைக் கேட்டுக்கொண்டு நீரும் ஏனையா வாய் கூசாது வாதாட வருகிறீர்?

மா. ப: யாகம் ஒருபோதும் சுயநலங் கருதிச் செய்யப்படுவதல்ல. அது உலக நன்மை கருதிச் செய்யப்படுவதென உணர்வீர்.

சா. ப: திரும்பத் திரும்ப அப்படித்தானே ஐயா பேசுகிறீர். யாகம் சுயநலங் கருதிச் செய்யப்படுவதல்ல எனின் ஆடுகளை மாத்திரம் ஏனையா அதிகமாய் யாகத்தில் கொலை செய்து உண்ணவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நன்மை கருதிச் செய்யப்படுவதுண்மையெனின் மனிதரைக் கொன்று செய்கின்ற நரமேத யாகத்தையும், பசுக்களைக் கொன்று செய்கின்ற கோமேத யாகத்தையும், அசுவமேதத்தையும் ஏன் செய்யத் துணியக்கூடாது? ஆடுகள் மாத்திரம் என்ன பாவஞ் செய்துவிட்டன.

சாதாரணமாய் மற்றக் கொலைகளிலாவது ஆடுகளை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்றுவிடப்படுகிறது. ஆனால் இந்த யாகத்தின் பேரால் கொல்லப்படுவதோ மகா பயங்கரமான முறையில் சித்திரவதை செய்து கொல்லப்படுகிறது.

தலையும் கால்களும் சிலரால் உறுதியாகப் பிடித்துக்கொள்ளப்படும். அந்த நிலையில் சிலர் அவற்றின் விதையை (பீஜத்தை)ப் பிசைந்து நசுக்கி கதறக்கதறக் கொல்வார்கள். அந்தோ! அப்போது அந்த உயிர் என்ன பாடுபடும்? நினைத்தாலும் உள்ளமும் உடலும் பதைக்கின்றனவே! அந்த காரியத்தைச் செய்வோர் தம் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தும் சிறிதும் இரக்கமின்றிச் செய்கின்றனரே! அவர் மனமென்ன கல்லா இரும்பா?

ஆடுகளைச் சாதாரணமாய் உண்ணுவதற்குக் கொலை செய்வது வேறு விஷயம்; தூய்மையான கடவுளின் பேராலும் சாஸ்திரங்களின் பேராலும் வாயில்லாப் பிராணிகளைப் பீஜமர்த்தனம் (விதை நசுக்கல்) செய்து சித்திரவதைக்கு உட்படுத்தல் தருமநீதியாகுமென எள்ளளவேனும் பகுத்தறிவுடையவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

இவற்றையெல்லாம் யோசிக்கப் புகுந்தால் மாமிசத்தைப் புசிப்பதற்காகவேண்டியே இவ்விதமான பற்பல காரணங்களைக்கூறிக்கொண்டு கொன்று இன்றுவந்தார்களென்று புலப்படுகின்றதன்றோ?

ஆகவே அவர்கள் என்னதான் மந்திர சக்தியைக்கொண்டு ஓர் உயிரை அதன் உடலினின்று பிரித்தாலும் அப்போதும் அது பரிதாபகரமான — மனஞ் சகிக்க முடியாத — சோகமான சம்பவமேயாகும். இரத்தஞ் சிந்துவது எங்கேனும் மகிழ்ச்சிக் குறியாகுமா? அது கோரமான பயங்கரத்திற்கன்றோ அறிகுறியாகும்?

கொலை செய்யாமலே யாகம் செய்ய முடியுமாதலால் உயிர் வதை செய்து நடத்தச் சொல்லப்படும் யாகத்தை நாம் கையாளாமல் விட்டுவிடலாம்; விடக்கூடாதென்று கட்டாயமல்ல. மேலும், புண்ணுக்குச் சமானமான இறைச்சிக்காக இவ்வளவு முறைகளைச் செய்து சாப்பிட வேண்டிய அவசியமே இல்லை. எந்தச் கிரியை செய்தாலும் அக்கினியை வளர்த்து நெய்விட்டு ஹோமம் செய்தாலே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வத்திற்குப் பலியிடலாமா?

மா. ப: ஐயா! நீர் கூறுகிறபடியே யாகத்தில் கொலை செய்து உண்பது குற்றந்தானென்று வைத்துக்கொள்வோம். ஆனல் சுவாமிக்குப் பலியிட்டுச் சாப்பிடுவதால் குற்றமென்பது உண்டாவதேயில்லை.

சா. ப: ஐயா! ''விலங்கு வேண்டாம் குட்டையில் மாட்டிக்கொள்கிறேன்'' என்பதுபோல யாகம் வேண்டாம் சுவாமிக்குப் பலியிட்டுச் சாப்பிடுகிறேன் என்கிறீரே! விலங்கும் குட்டையும் ஒரே தன்மையுடையனபோல, யாகம் குற்றமான செய்கையென்றல் பலியிடுதலும் குற்றமானதே என்பதை ஏனே நீர் உணர்கின்றீரில்லை?

மா. ப: நீர் கூறுகிறபடி அதில் அப்படி ஏதாவது குற்றமிருப்பதாக எனக்குப் புலப்படவில்லையே?

சா. ப: நன்றய்ச் சொன்னீரையா! கண்ணிருந்தும் குருடரென நடிப்பதைப்போல, அறிவிருந்தும் மூடராய்ப் பேசுகின்றீரே! உமது அறியாமைக்காக மிகவும் வருந்துகின்றேன். தமக்கென்று கூறிப் புலாலைப் புசிப்பதைப் பார்க்கிலும் தெய்வத்தின் பேரைச் சொல்லித் தின்பதால் பாபமில்லையென்று நினைப்பதும் உமது நெடுநாள் பழக்கமேயாகும். அதனல் அதிலுள்ள பாபத்தையும் யோசித்துப் பார்க்க உமக்கு நேரமில்லை போலும்!

உமது அறிவை நன்றய்த் துலக்கி யோசித்துப் பாரும். இப்பூமியிலுள்ள சகல சராசரங்களையும் படைத்துக் காத்து வருவது யாவர்க்கும் பொதுவான தெய்வமேயன்றே? அவரின் படைப்பில் படிப்படியாய் சக்திகளிலும் குணதிசயங்களிலும் தாரதம்மியங்களிருப்பினும் உம்மைப் பார்ப்பது போலவே அவர் மற்றப் பிராணிகளையும் பாதுகாத்து வருகிறர்.

அவர் நம்மை உண்டாக்கிக் காத்துவருவதன் காரணமாய் நமக்குப் பிதாவுமாகின்றரல்லவா? அம்முறையில் பார்த்தால் மனிதரும் மற்ற ஆடு மாடு கோழி போன்ற சீவகோடிகள் யாவும் அவரது பிள்ளைகளாகிறேமல்லவா? அதனல் நாம் ஒருவர்க்கொருவர் சகோதரர்களாகிறேமென்பதும் தெளிவாகவில்லையா? ஒரே தந்தையின் பிள்ளைகளாகிய சகோதரர்கள் அத்தகப்பனின் முன்னிலையிலேயே ஒருவரையொருவர் அடித்தும் வெட்டியும் குத்தியும் கொலை செய்துகொள்வாரர்களானல் அவருக்கு அதைக்காண மனஞ் சகிக்குமா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசிந்தனை

மார்க்க அரேலியர்

உலகம், அதிலுள்ள கோடிக்கணக்கான பிராணிகள், உயிரற்ற வஸ்துக்கள் இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று பரஸ்பர சம்பந்தத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பாகும். இந்த உலகத்திலிருந்து ஒருவன் தன்னை வேறுபடுத்திக்கொண்டு வாழ்வில் உடம்பில் ஒரு கொப்பளம் அல்லது பரு உண்டாவது போலாகும்; சரீர சம்பந்தம் இருந்தும் அதன் அமைப்பில் சரியாய்ச் சேராமல் நோய் இழைப்பது கொப்புளம் அல்லது புண். ஒருவன் உலகத்திலுள்ள ஜீவராசிகளுடன் ஐக்கியப்படாமல் தன்னை வேறுபடுத்திக் கொள்வதும் ஆத்மத்துரோகமாகும். இந்த உலகத்தில் ஒரு பாகமாகிய எனக்கு நேரிடும் எந்தச் சம்பவத்தைக் குறித்தும் நான் வருத்தப்படக்கூடாது. வருத்தப்பட்டால் உலக அமைப்பில் சேருவதற்கு இணங்காமல் அதற்கு இடையூறு விளைவித்ததைப் போலாகும்.

உலகம் முழுவதும் அடங்கியுள்ள பராசக்திக்கு அது துரோகமாகும். ஒருவனைத் துவேஷித்தாலும் அல்லது ஒருவன்மேல் கோபங்கொண்டு தீங்கு செய்ய நினைத்தாலும் அது உலகத்தினின்று வேறுபடும் குற்றமாகும். நேர்ந்த இன்பத்தினுலாவது, துன்பத்தினுலாவது மனநிலை கெட்டால் அதுவும் ஆத்மத்துரோகமாகும். கபடம், பொய், மோசம் இவை கலந்த பேச்சும், செயலும் ஆத்மத்துரோகமாகும். எந்தச் சிறிய காரியத்தையும் பாரமார்த்திக எண்ணத்துடன் செய்யவேண்டும். அரசன் கட்டளைகளுக்கும், அமைப்புக்கும் கீழ்ப்பட்டு நாம் நடப்பது போல் பகுத்தறிவுள்ள ஒவ்வொருவனும் எல்லா ஆட்சிகளுக்கும்மேலான ஆட்சியும் அமைப்புமான இந்த உலக அமைப்பின் தெய்வீக தருமத்தை அநுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

மனிதனுடைய ஆயுள் மிகச் சுருங்கியது. அவன் மனத்தைக் கவரும் விஷயங்களும் நிலையற்றவை. மனிதனுடைய உணர்ச்சியும் தெளிவற்றது. உடலும் அழிவுள்ள பொருள்களால் ஆக்கப்பட்டது. மனமும் நீர்மேல் குமிழி போன்றது. விதியும் அறியக் கூடாதது புகழும் அறிந்தோர் ஆக்குவதல்ல. சுருங்கச் சொல்லின் உடலுக்குச் சம்பந்தப்பட்டதெல்லாம் நீரோட்டம். மனதுக்குச் சம்பந்தப்பட்டதெல்லாம் கனவு. ஆயுள் நாளெல்லாம் ஒரு பெரும் போர், அல்லது பரதேசியின் யாத்திரை. இறந்தபின் அடையும் புகழும் ஒருபெரும் அந்தகாரம். ஆனால் இவற்றினிடையில் மனிதனுக்கு எது வழிகாட்டியாகும்? ஞானம்ஒன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஞானம் எதுவென்றால் ஒவ்வொருவன் உள்ளத்திலும் குடி கொண்டிருக்கும் தெய்வத் தன்மையுடைய ஆத்மாவுக்குத் தீங்கும் நோயும் உண்டாகாமல் பாதுகாப்பதே. சுகத்திற்கும் துக்கத்திற்கும் மேலாக ஆத்மாவை நிறுத்தி வைப்பதே ஞானமாகும். பயனில்லாச் செயல், மோசம், கபடம் இவைகளைச் செய்யாதிருத்தலே ஞானம். தனக்கு மற்றொருவன் இது செய்யவேண்டும், இது செய்யாமல் ஒழிய வேண்டும் என்று எதிர்பாராதிருத்தலே ஞானம். எது நேரிட்டாலும் எந்தக் கடவுள் என்னைப் படைத்தாரோ, அல்லது எந்தப் பிரகிருதி அமைப்பில் நான் ஒரு பாகமாய்ப் பிறந்தேனோ, அந்தத் தெய்வம், அந்தப் பிரகிருதியே அதற்குக் காரணம் என்றறிந்து, நேரும் சுகம், துக்கம் இரண்டையும் வருத்தமின்றி ஒப்புக்கொள்வதே ஞானம்.

முடிவில் சாந்த சித்தத்துடன் மரணத்தை எதிர்கொள்வதே ஞான மாகும். மரணம் என்றால் என்ன? எந்த மூலதாதுக்கள் சேர்ந்து உடல் உண்டாயிற்றோ, அந்தத் தாதுக்களாக மறுபடி உடல் பிரிந்துபோவதே மரணம். இதைக்கண்டு ஏன் கலங்க வேண்டும்? நாம் யார்? சில பொருட்களின் சேர்க்கையினால் தானே நாம் உண்டாகியிருக்கிறோம். அந்தப் பொருள்களுக்கு அழிவாவது குறைவாவது கிடையாது. அவை ஓயாமல் உருவம் மாறியும் அமைப்பு மாறியும் இருந்துகொண்டிருக்கும். அவைகளைப் பற்றிக் கவலையில்லை. அவ்வாறிருக்க, அந்தப் பொருள் களின் சேர்க்கையாகிய இந்த உடலின் மாறுதலைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? மரணம் பிரகிருதியின் இயல்பாகும். இயல்பான ஒரு விஷ யம் எப்போதும் தீங்காகாது.

உன்னுடைய யாத்திரை முடிந்தது. திரும்பிப் போகும் தருணம் வந்தது. புறப்படு. மரணத்தைக் குறித்துப் பயப்படாதே. இந்த உயிரை விட்டு நீங்கி வேறு உலகம் சென்றால் அதுவும் தெய்வ ஆட்சிக்குள் அடங்கிய உலகந்தான். ஆகையால், ஏன் பயப்படவேண்டும்? இறந்த பின் வேறு உலகம் கிடையாது; உயிர் கிடையாது, உணர்ச்சி கிடை யாது. என்றாலும் அதைப்பற்றித்தான் என்ன கவலை? இன்பம், துன் பம் ஒன்றும் இல்லாமல் இந்த உடலுக்காக எப்போதும் பாடுபடுவதை விட்டுச் சுகமாக இருக்கலாமல்லவா? அழுகிப்போகும் இந்த ஊன சரீரத் திற்காக எந்நேரமும் நாம் தொண்டு செய்வதிலிருந்து விடுபடுவது நன் மையேயாகும்.

உனக்கு உள்ள காலம் மிகக்குறைவு. அதை வீணாக்க வேண்டாம். அயலாருடைய குற்றங்களைக் கணக்கிட்டுக்கொண்டு காலத்தை வீணா கக் கழிக்கவேண்டாம். அவன் என்ன செய்கிறான்? இவன் என்ன செய் கிறான்? அதை ஏன் அவன் செய்கிறான்? இவன் என்ன நினைக்கிறான்? அவன் உள்ளத்தில் என்ன எண்ணம்! என்ன சூழ்ச்சி? இவை போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகளைக்கொண்டு நமது ஆத்மக்ஷேமத்தை மறந்துவிட்டு மற்றவர்களைக் குறித்தே அறிவையும் காலத்தையும் வீணாக்கி விடுகின்றோம். பயனில்லாமல் எதேச்சையாக மனம் செல்லுவதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். அதிலும் தீய எண்ணங்களை அறவே ஒழித்தல் வேண்டும்.

திடீரென்று ஒருவர் "நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளதை உள்ளபடியே, "இதை நினைத்தேன். இது என் மனத்திலுள்ள எண்ணம்" என்று எளிதில் சொல்லக் கூடியவாறு உன் மனதைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறருக்குச் சொல்லத்தகாத எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும். நீ நினைக்கும் எண்ணங்கள் எல்லாம் பிறருக்கு நன்மைபயக்கத் தக்கவை, தீங்கற்றவை, சுயநலங்கருதாதவைகளாய் இருக்கவேண்டும். கேவலம் காம இன்பம், கலகம், துவேஷம், அவநம்பிக்கை ஆகிய எண்ணங்கள் மனதில் உதிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இப்படி மனதைப் பழக்கிக் கொண்டு நன்மையே நாடிவரும் மனிதன் கடவுளின் உண்மை அடியானவான். தனக்குள் குடியிருக்கும் தேவாம்சமான ஆத்மாவை எந்த இன்பமும் மாசு படுத்தாமலும், எந்தத் துன்பமும் நோவு படுத்தாமலும் அவன் காப்பாற்றிக் கொள்வான். பிறருடைய துவேசம், அவமரியாதை, குற்றம் ஆகியவற்றால் தன் மனதைக் கலங்கச் செய்ய விடான். இவ்வாறு தன் உள்ளத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு ஆத்மாவைத் துன்புறுத்தும் காமக் குரோதாதிகளுடன் போர் செய்து வெற்றி அடைவான். நடுநிலை கொண்டவனுவான். சுகம் துக்கம், நன்மை, தீமை எது நேரிடினும் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வான். உலகத்தின் நன்மைக்கு வேண்டியவலன்றிப் பிறர் செயலும் சொல்லும் எண்ணமும் என்னவென்று கவலைப்படாமல் தன் கடமையைக் கருதி வாழ்வான். தன் செயலையும், சொல்லையும், எண்ணத்தையும் பிழையறக் காப்பான். உலக அமைப்பில் தனக்கு நேர்ந்த சுகம், துக்கம் இரண்டையும் சமமாகவே பாவிப்பான்.

அறிவுள்ள ஜீவகோடிகள் எல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களாவார்கள் என்பதை மறக்கமாட்டான். மற்றவர்கள் நலத்தை நாடுவதே மனிதனுடைய இயல்பான தருமம் என்று அறிவான். நல்வாழ்வு வாழ்பவர்களுடைய மதிப்பை மாத்திரம் கருதுவான். தரும வழியில் நில்லாத மற்றவர்களுடைய ஒப்புதலையும், பாராட்டுதலையும் நாடமாட்டான். அவர்களுடைய மதிப்பை ஒரு பொருளாகக் கருதாமல் தள்ளுவான். "தங்கள் வாழ்வு தங்களுக்கே பிடிக்கவில்லை. அத்தகையாருடை நன்மதிப்பு எனக்கு என்ன பயன்?" என்று அதைப் பற்றிக் கவலைப்படமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும் தீந்தமிழ்! பக்திச்சுவை மிகுந்தது!

எத்திக்கும் திருவேற்காடு

## தேவி கருமாரி அம்மன் புகழ் பரப்பும்

திங்கள் ஏடு



# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் விஜயம்

(மாத இதழ்)

ஆசிரியர்:

திருவேற்காடு அருட்கவியரசு

**ஸ்ரீ தேவி கருமாரிதாசர் சுவாமிகள்**

## பக்திக் கதைகள்—அருள் நெறி இலக்கியங்கள்
## வெண்பாப் போட்டி
## வேதம், புராணம், இதிகாசம், ராசிப்பலன் மற்றும் பல!

| | | | |
|---|---|---|---|
| இந்தியா: | தனிப்பிரதி | ரூ. | 2-00 |
| | ஆண்டுச் சந்தா | ரூ. | 24-00 |
| ஸ்ரீ லங்கா— மலேசியா— நாடுகளுக்கு | ஆண்டுச் சந்தா | ரூ. | 50-00 |

விபரங்களுக்கு:

**சூப்பர் பவர் பப்ளிகேசன்ஸ்**

152, முதல் மாடி-தம்புச்செட்டித் தெரு

சென்னை 600001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00

# சந்தா நேயர்களுக்கு

திருவருளை முன்னிட்டு எல்லா நலன்களும் பெற்று வாழ்வீர்களாக! இச்சுடர் 35-வது ஆண்டுக்குரிய ஐந்தாவது சுடராகும். இவ்வாண்டுக்குரிய சந்தா 25/- ரூபாவையும் அனுப்பிவைப்பதோடு, பழைய நிலுவை இருப்பின் அவற்றையும் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். சந்தா இலக்கங்களையும் குறிப்பிட்டு எழுதினால் உடனே ரசீது அனுப்பிவைக்க வசதியாக இருக்கும். விலாச மாற்றங்களின் போது சந்தா இலக்கம், பழைய விலாசம், புதிய விலாசம் என்பனவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பிவையுங்கள். ஒரே பெயரில் பல விலாசதாரர்கள் இருக்கிறார்கள். ஆகவே தெளிவுபெறுவதற்கு மேற்கூறியன அவசியம் தேவை. சிலர் தந்தியில் பணத்தை மாத்திரம் அனுப்பிவிடுகிறார்கள். வேறு எத்தகைய தகவலும் எம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே தந்தியில் சந்தா இலக்கத்தையும் பெயரையுமாவது குறிப்பிடுங்கள். ஆத்மஜோதி தொண்டு சிறப்புற நடைபெறுவதற்கு உங்கள் சந்தாவை உடனே அனுப்பிவைப்பதோடு ஒரு புதிய அங்கத்தவரையாவது சேர்த்து உதவுக.

ஆத்மஜோதி நிலையம். நா. முத்தையா
நாவலப்பிட்டி. (ஸ்ரீ லங்கா)

**இந்திய விலாசம்:**

S. RAJASEKARAN
'Visalakshi Illam', 274, Royapettah High Road,
Royapettah–Madras-600 014, Tamilnadu.
P. O. Box 5577, Telephone: 847107

**மலேசியா விலாசம்:**

S. SUBRAMANIYAM
Sri Eswari Flour Mill,
99-L. Jalan Tandok, Kualalumpur, Malaysia.

**சிங்கப்பூர் விலாசம்:**

Mrs. M MAHESWARY THEVI
No. 03 - 3597 Geylang Bahru.
Singapore 1233, Tel. 8955229

**இந்துனேசியா விலாசம்:**

SRI MARIYAMMAN KOVIL
Jalan Teuku Umar No: 18,
Medan-Sumatra, Indonesia.

ஆசிரியர் : நா. முத்தையா
அச்சுப்பதிவு : ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி (ஸ்ரீ லங்கா)
அச்சிட்ட திகதி: 15-3-83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org